Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, JANUARY 18, 2023

புதன்கிழமை ஜனவரி 18, 2023 | ஒளி: 08 கதிர்: 189 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | FREE



## 14 நாள்களுக்கு மின்வெட்டு இல்லை

■ மஹேஸ்வரி விஜயனந்தன்

உயர்தரப் பரீட்சைகள் நடைபெறும் 14 நாள்களுக்கு எவ்வித தடையுமின்றி தொடர்ந்து மின்சாரம் வழங்குமாறு கல்வி அமைச்சு கோரிக்கை விடுத்துள்ளதாகத் தெரிவித்த அமைச்சரும் அமைச்சரவை பேச்சாளருமான பந்துல குணவர்தன, பரீட்சை காலத்தில் பிள்ளைகளுக்கு மின்சாரம் வழங்குவதற்கு எப்படியாவது நடவடிக்கை எடுப்பதாக எரிசக்தி அமைச்சர் உறுதியளித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



நட்டஈட்டை வழங்க

# என்னிடம் பணம் இல்லை



**மக்களிடம் இருந்து உதவிகளை பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கின்றேன்.**

■ பா. நிரோஸ்

ஜனாதிபதியினால் நியமிக்கப்படும் அதிகாரிகள் தவறிழைக்கும் போது அதற்கு ஜனாதிபதியே பொறுப்பானவர் என்ற ரீதியிலேயே உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பான வழக்கில் 10 கோடி ரூபா நஷ்ட ஈட்டை வழங்குமாறு தீர்ப்பு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும், இது தனக்கு எதிராக விதிக்கப்பட்ட தண்டப்பணம் அல்லவெனவும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

இந்தியாவுடனும் சீனாவுடனும் நடத்தப்படும்

## பேச்சுவார்த்தைகள் வெற்றி

**மக்கள் நலனுக்காக புதிய அரசியல் பயணத்தை தொடங்குவோம்**

■ பா. நிரோஸ்

கடன் மறுசீரமைப்பு தொடர்பில் இந்தியா மற்றும் சீனாவின் இணக்கப்பாட்டை பெற்றுக் கொள்வதற்காக நடத்தப்படும் பேச்சுவார்த்தைகள் வெற்றியளித்திருப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று (17) பாராளுமன்றத்தில் தெரிவித்தார். மக்களுக்கு நிவாரணம் வழங்குவதன் மூலம் அவர்களை துன்பத்திலிருந்து விடுவிக்கும் புதிய அரசியல் முறைமையில் ஒற்றுமையுடன் கைகோர்க்குமாறு ஜனாதிபதி வேண்டுகோள் விடுத்தார்.

தொடர்ச்சி P2

## கப்ராலின் பயணத்தடை பெப்ரவரி 16 வரை நீடிப்பு



மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ராலுக்கு விதிக்கப்பட்ட பயணத்தடையை எதிர்வரும் பெப்ரவரி 16 ஆம் திகதி வரை நீடித்து கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தொடர்ச்சி P2

உலக வங்கியின்

## அபிவிருத்தி திட்டங்களுக்கு வரிச்சலுகை

தற்போது நிலவுகின்ற பொருளாதார நிலைமையைக் கருத்தில் கொண்டு வெளிநாட்டு நிதியை முழுமையாக கருத்திட்ட செயற்பாடுகளுக்குப் பயன்படுத்துவதற்கு இயலுமாகும் வகையில் கருத்திட்டத்திற்கு ஏற்புடைய வரி செலுத்தல்களிலிருந்து விடுவிப்பது பொருத்தமானதென அமைச்சரவையில் தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில், இக்கருத்திட்டத்தை வரி செலுத்துவதிலிருந்து விடுவிப்பதற்கான தகைமையைப் பெறுவதற்கான திட்டவட்டமான கருத்திட்டமாக நிதி பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் மூலம் செயற்படுத்த போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

தொடர்ச்சி P2

தேர்தல் செலவு ஒழுங்குபடுத்தல் சட்டமூலத்துக்கு

## சாதாரண பெரும்பான்மை போதும்

■ பா.நிரோஸ்



தேர்தல் செலவு ஒழுங்குபடுத்தல் சட்டமூலம் அரசியலமைப்புக்கு முரண் இல்லை. அதனை பாராளுமன்றத்தில் சாதாரண பெரும்பா ன்மையுடன் நிறைவேற்றி க்கொள்ள முடியும் என உயர்நீதிமன்றம் அறிவித்துள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன நேற்று (17) சபைக்கு அறிவித்தார்.

தொடர்ச்சி P2

## அரசியலமைப்பை அமைச்சரவை மீறிவிட்டது

■ பா.நிரோஸ்



உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான கட்டுப்பணத்தைப் பெற வேண்டாமென அமைச்சரவை எடுத்த தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டு, கட்டுப்பணத்தை மாவட்டச் செயலாளர்கள் பெற வேண்டாமென பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் அறிவித்திருந்தமை அரசியலமைப்புக்கு எதிரானது என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். அரசியலமைப்புக்கு எதிராகச் செயற்பட்ட அமைச்சின் செயலாளர், அமைச்சரவை உள்ளிட்ட அனைவருக்கு எதிராகவும் தேர்தல் ஆணைக்குழு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பாராளுமன்றத்தில் நேற்று (17) கேட்டுக்கொண்டார்.

தொடர்ச்சி P2

## இன்றுமுதல் வேட்புமனு தாக்கல்

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான வேட்புமனு தாக்கல் இன்று (18) ஆரம்பமாகவுள்ளது. இதற்கான அவகாசம் எதிர்வரும் 21ஆம் திகதி நண்பகல் 12 மணியுடன் நிறைவடையவுள்ளது.

தொடர்ச்சி P2



## தனித்து போட்டியிடவே சு.க தீர்மானம்

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் கை சின்னத்தில் போட்டியிட ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி தீர்மானித்துள்ளதாக அக்கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வீரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். எனினும் ஒரு சில தொகுதிகளில் கூட்டணியாகவும், பெரும்பாலான தொகுதிகளில் தனித்தும் பேணியும் போட்டியிடுவோம் என கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## சீனாவுடன் உடன்படிக்கையா?

சீனாவுடனான சுதந்திர வர்த்தக உடன்படிக்கை தொடர்பில் பல்வேறு சந்தேகங்கள் காணப்படுவதாகவும், இதனால் அந்த உடன்படிக்கையின் தற்போதைய நிலை என்ன என்பது தொடர்பில் அரசாங்கம் அறிவிக்க வேண்டும் எனவும் ஜே.வி.பி தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (17) நடைபெற்ற இறக்குமதி, ஏற்றுமதி கட்டுப்பாடுகள் தொடர்பான ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அநுரகுமார இதனை தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

உண்மையைக் கண்டறியும்

## ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த இணக்கம்

உண்மையைக் கண்டறிதல் மற்றும் மீளிணக்கப் பொறிமுறை தொடர்பான கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் தொடர்பாக ஜனாதிபதி, பிரதமர், கடற்றொழில் அமைச்சர், கல்வி அமைச்சர், நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஆகியோர் இணைந்த சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

தொடர்ச்சி P2

கூட்டுப் பயிற்சிகளில்

## இலங்கை -அமெரிக்க இராணுவத்தினர்

அமெரிக்க கடற்படையுடன் இலங்கை கடற்படை மற்றும் இலங்கை விமானப் படை என்பன இணைந்து கூட்டுப் பயிற்சி நடவடிக்கையை கொழும்பில் ஆரம்பிக்கவுள்ளன.

தொடர்ச்சி P2

தலாய் லாமா இலங்கை வருவதற்கு

## சீனா கடும் கண்டனம்



திபெத்தின் ஆன்மீக தலைவர் தலாய் லாமா இலங்கைக்கு விஜயம் மேற்கொள்வதை தாம் கடுமையாக எதிர்ப்பதாக மல்வத்த பீடாதிபதி திப்பெட்டுவாவே ஸ்ரீ சித்தார்த்த சுமங்கள தேரரை கண்டியில் சந்தித்தவேளை இலங்கைக்கான சீன தூதரகத்தின் பொறுப்பதிகாரி ஹியு வெய் இதனை தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

அரச ஊழியர்களின்

## சம்பளக் கொடுப்பனவுகளில் மாற்றம்

2023 ஆம் ஆண்டுக்கான அரசின் புதிய வரி வருமானங்கள் தொடர்பான முன்மொழிவுகள் அமலாக்கம் செய்வதற்கு ஆரம்பித்துள்ளதுடன், அதன்மூலம் வருமானம் திரட்டுவதற்கு ஒரு குறிப்பிட்ட காலம் எடுப்பதால், அரச நிதிப்பாய்ச்சல் வரையறைகளுக்குப் பொருத்தமான வகையில் ஜனவரி மாதம் தொடக்கம் எதிர்வரும் ஒருசில மாதங்கள் அர ச செலவினங்களை முகாமைத்துவப்படுத்த வேண்டியுள்ளதாக அமைச்சரவையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# என்னிடம் பணம் இல்லை

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான வழக்குத் தீர்ப்பில் என்னைப் பற்றிய தீர்ப்பு குறித்து பல்வேறு கருத்துக்களை பலரும் கூறி வருகின்றனர். அது பற்றி இங்கே குறிப்பிட வேண்டியுள்ளது. நான் பாராளுமன்றத்திற்கு 1989 இல் வந்தேன். அப்போது விடுதலைப் புலிகளின் யுத்தம் உள்ளிட்ட பல்வேறு அமைதியின்மை நிலவின. அப்போது பெருமளவானவர்கள் உயிரிழந்தனர். இராணுவத்தை சேர்ந்த பலர் இறந்ததுடன், விமானங்கள் பலவும் அழிக்கப்பட்டன. அது மாத்திரமன்றி முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குண்டுத் தாக்குதலில் கண்ணை இழந்தார். அதேபோன்று முன்னாள் இராணுவத் தளபதியும் குண்டுத் தாக்குதலுக்கு இலக்கானார். இவ்வாறு பல சம்பவங்கள் நடந்தன. அப்போது அவர்களால் அந்த அனர்த்தங்களை தடுக்க முடியாது இருந்தன. இப்படி இருக்கையில் என்னால் தடுக்க முடியும் என்று கூற முடியாது.

தீர்ப்புக்கு நான் தலைசாய்கின்றேன். எனினும் அந்த தீர்ப்பில் 10 கோடி ரூபா நஷ்ட ஈட்டை வழங்குமாறு கூறப்பட்டுள்ளது. ஜனாதிபதியின் கீழுள்ள அதிகாரிகள் தவறிழைக்கும் போது ஜனாதிபதியே பொறுப்பு, இதன்படியே தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இது எனக்கு விதிக்கப்பட்ட தண்டப்பணம் அல்ல. என்னிடம் அந்தளவு பணம் இல்லை. நான் சொத்து விபரங்களை முன்வைத்துள்ளேன். ஜனாதிபதி காலத்திலும் அதனை முன்வைத்தேன். அதில் எனக்குள்ள சொத்துக்கள் தொடர்பில் கூறப்பட்டுள்ளன. இதனால் உண்மைகளை புரிந்துகொண்ட மக்களிடம் இருந்து உதவிகளை பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கின்றேன்.

நான் அதிகாரிகளை நியமிப்பதால் அதற்கு நானே பொறுப்பாகும். இதற்கமையவே என்னைப் பற்றி இவ்வாறான தீர்ப்பு வழங்கப்பட்டது. இல்லாவிட்டால் நான் இதில் நிரபராதியாகவே இருந்திருப்பேன். நீதிமன்ற தீர்ப்பில் தாக்குதல் தொடர்பிலான தகவல்களை ஜனாதிபதி அறிந்திருக்கவில்லை என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. புலனாய்வு தகவல்கள் எனக்கு கிடைக்கவில்லை என்று உயர்நீதிமன்றம் நிலைப்பாட்டுக்கு வந்துள்ளது. இது நான் குற்றமற்றவர் என்பதனை காட்டுகின்றது என்றார்.

## அரசியலமைப்பை அமைச்சரவை மீறிவிட்டது

உள்ளூராட்சி மன்ற தேர்தல் தொடர்பான அறிவிப்பும் வர்த்தமானி அறிவித்தலும் வெளியிடப்பட்டுள்ளன. இதன்படி தேர்தல் ஆணைக்குழுவின் அறிவுறுத்தல்கள், ஆலோசனைகளை அரச அதிகாரிகள் உள்ளிட்ட அனைவரும் பின்பற்ற வேண்டும் என அரசியலமைப்பில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனை மீறுவது அல்லது இதற்கு எதிராகச் செயற்படுதல் என்பன 3 வருடங்கள் சிறைதண்டனை அல்லது 1 இலசட் ரூபாய் அபராதம் விதிக்கக்கூடிய அல்லது இவ்விரண்டு தண்டனைகளையும் வழங்கக்கூடிய குற்றம் என அரசியலமைப்பில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றார்.

இவ்வாறான நிலையில் தேர்தல் அறிவிக்கப்பட்டு கட்டுப்பணங்கள் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், கட்டுப்பணங்களை மாவட்டச் செயலாளர்கள் பெற வேண்டாம் என பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் அனைத்து மாவட்டச் செயலாளர்களுக்கும் அறிவித்திருந்தார். அமைச்சரவை எடுத்த தீர்மானத்தின் பிரகாரமே இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டிருந்தது. இது அரசியலமைப்பை மீறும் செயல், ஜனநாயகத்தை மீறும் செயல். அமைச்சரவையே இந்நாட்டின் அரசியலமைப்பை மீறியுள்ளது. இது தொடர்பில் அனைவருக்கு எதிராகவும் தேர்தல் ஆணைக்குழு கடும் சட்டநடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் சஜித் சபையில் கேட்டுகொண்டார்.

## கப்ராலின் பயணத்தடை பெப்ரவரி 16 வரை நீடிப்பு

தென் மாகாண முன்னாள் ஆளுநர் ரஜித் கீர்த்தி தென்னகோன் சமர்ப்பித்த தனிப்பட்ட மனு நேற்று (17) கொழும்பு மேலதிக நீதவான் ஹர்ஷன கெகுனவல முன்னிலையில் அழைக்கப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இந்த வழக்கு தொடர்பான எழுத்துமூல சமர்ப்பணங்களை முன்வைக்க கப்ரால் தரப்புக்கு பிப்ரவரி 16ஆம் திகதி வரை நீதிமன்றம் அவகாசம் அளித்துள்ளது. 2006 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை இலங்கை மத்திய வங்கியின் ஆளுநராக கடமையாற்றிய அஜித் நிவார்ட் கப்ரால் பொது நிதியை முறைகேடாக பயன்படுத்தியதாக அவருக்கு எதிராக இந்த தனிப்பட்ட மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## அபிவிருத்தி திட்டங்களுக்கு வரிச்சலுகை

பாதுகாப்பு, வினைத்திறனான மற்றும் காலநிலைக்கு தாக்குப்பிடிக்கும் தொடர்புகளை வழங்கல் மற்றும் விவசாய வழங்கல் சங்கிலியை பலப்படுத்தல் போன்றவற்றை நோக்கங்களாகக் கொண்டு இலங்கையில் தெரிவு செய்யப்பட்டுள்ள மாவட்டங்களில் அடையாளங் காணப்படுகின்ற சமூகத்தவர்களை வலுவூட்டுவதற்காக இடைத்தொடர்புகள் மற்றும் அபிவிருத்திக் கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. குறித்த கருத்திட்டத்தின் கீழ் ஆரம்ப கட்டத்தில் நாடளாவிய ரீதியில் 3,000 கிலோமீற்றர் கிராமிய வீதிகளை அபிவிருத்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## சம்பளக் கொடுப்பனவுகளில் மாற்றம்

அதற்கமைய, பதவிநிலை அல்லாத உத்தியோகத்தர்களுக்கு மாதாந்த சம்பளக் கொடுப்பனவை குறித்த தினத்தில் செலுத்துவதற்கும், பதவிநிலை உத்தியோகத்தர்களின் சம்பளத்தை குறித்த சில தினங்களுக்குப் பின்னர் செலுத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே இது குறித்து எவரும் அச்சம் கொள்ளத் தேவை இல்லை என தெரிவித்த அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான பந்துல குணவர்தன, அரசாங்க ஊழியர்களின் சம்பளம், ஓய்வூதியம், சமூர்த்திக் கொடுப்பனவு, உரம், மருந்து வகை என்பவற்றை நாம் எப்படியாவது வழங்குவோம். அதற்காக பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுப்போம் என்றும் தெரிவித்தார்.

திறைசேரியால் மேற்கொள்ளப்பட்டுள்ள படிமுறைகள் தொடர்பாக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## இலங்கை -அமெரிக்க இராணுவத்தினர்

CARAT/MAREX Sri Lanka என்பது பிராந்திய பாதுகாப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துதல், கடல்சார் பங்காண்மைகளைப் பேணி வலுப்படுத்துதல் மற்றும் கடல்சார் நடவடிக்கைகளில் இணைந்து செயற்படும் திறன்களை அதிகரித்தல் ஆகிய நோக்கங்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ள இலங்கைக்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான இருதரப்புப் பயிற்சியாகும்.

இது அமெரிக்காவிற்கும் இலங்கைக்கும் இடையிலான ஐந்தாவது CARAT/ MAREX பயிற்சியாக அமைவதுடன், இந்த வருடம் ஜப்பான் கடல்சார் தற்காப்புப் படை மற்றும் மாலைதீவு தேசிய பாதுகாப்புப் படை ஆகியவற்றின் பங்கேற்பாளர்களையும் இப்பயிற்சி உள்ளடக்கியுள்ளது. பயிற்சிப் பரிமாற்றங்கள் கொழும்பிலும் மற்றும், திருகோணமலை மற்றும் முள்ளிக்குளம் ஆகிய இடங்களிலுள்ள இலங்கை கடற்படைத் தளங்களிலும் நடைபெறும்.

இடம்பெறவிருக்கும் இப்பயிற்சி நடவடிக்கை குறித்து அமெரிக்கத் தூதுவர் ஜூலீ சங் கருத்துத் தெரிவிக்கையில் “இலங்கையுடனான எமது இருதரப்பு உறவுகளின் 75ஆவது வருடத்தில், இப்பயிற்சிக்காக இலங்கைக் கடற்படை மற்றும் இலங்கை விமானப்படையுடன் இணைந்து பணியாற்றுவதில் அமெரிக்கா பெருமையடைகிறது.

இந்த வருடாந்த பயிற்சிகள், அனர்த்த நிவாரண நடவடிக்கைகளுக்குத் தயார்படுத்துவதற்கும், சுதந்திர மற்றும் திறந்த இந்தோ-பசிபிக் பகுதியை பராமரிப்பதற்கும் ஒரு முக்கியமான வாய்ப்பாகும். பயிற்சியை ஒன்றாக இணைந்து நடாத்துவதற்கு அழைப்பு விடுத்தமைக்கு நாங்கள் நன்றியறிதலுடன் உள்ளோம்,”எனக் கூறினார்.

இந்தோ-பசிபிக் பிராந்தியத்தில் உள்ள பாரம்பரிய மற்றும் பாரம்பரியமற்ற கடல்சார் பாதுகாப்புச் சவால்களுக்கு பதிலளிக்கும் வகையில் அமெரிக்காவும் பங்காளர் கடற்படைகளும் இணைந்து செயற்படுவதற்கான அவற்றின் திறன்களை மேம்படுத்தும் வகையிலும் விளையாட்டு, கலாச்சாரம் மற்றும் தகவல் பரிமாற்றங்கள் ஊடாக உறவுகளை கட்டியெழுப்பும் வகையிலும் இந்த ஒரு வார கால பயிற்சியானது வடிவமைக்கப்பட்டுள்ளது. மனிதாபிமான அனர்த்த நிவாரணம் மற்றும் உயிர்காக்கும் நடவடிக்கைகள் தொடர்பான பயிற்சிகளுக்கு மேலதிகமாக, அமெரிக்க மற்றும் இலங்கை வீரர்கள் தூதுவர் சங்குடன் இணைந்து பெண்கள், அமைதி மற்றும் பாதுகாப்பு தொடர்பான ஒரு வட்டமேசை மாநாட்டிலும் கலந்துகொள்வர். இப்பயிற்சியின் போது, 7ஆவது கப்பற்படையின் வாத்தியக்குழுவானது இலங்கை கடற்படை வாத்தியக்குழுவின் பங்கேற்புடன் கொழும்பில் தொடர்ச்சியான இலவச இசை நிகழ்ச்சிகளை வழங்கும்.

## சாதாரண பெரும்பான்மை போதும்

பாராளுமன்றம் நேற்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் கூடியது. இதன்போது சபாநாயகரின் அறிவிப்பின் போதே சபாநாகர் உயர் நீதிமன்றம் அனுப்பியுள்ள தீர்ப்பை சபைக்கு அறிவித்தார். சபாநாயகர் இதன்போது தெரிவிக்கையில்,

அரசியலமைப்பின் 121 -1 அரசியலமைப்புக்கு அமைய உயர் நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்தப்பட்டிருந்த தேர்தல் செலவு ஒழுங்குபடுத்தல் சட்டமூலம் தொடர்பில் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு எனக்கு கிடைக்கப்பெற்றுள்ளது என்பதை பாராளுமன்றத்துக்கு தெரிவிக்கின்றேன். உயர் நீதிமன்றத்தினால் குறித்த சட்டமூலத்தின் விதிமுறைகள் தொடர்பில் விசாரணை மேற்கொண்ட பின்னர் உயர் நீதிமன்றத்தின் தீரப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கும் திருத்தங்களுக்கு கீழ் சட்டமூலத்தின் விடயங்கள் எதுவும் அரசியலமைப்புக்கு முரணாக அமைவதில்லை எனவும் பாராளுமன்றம் சாதாரண பெரும்பான்மையுடன் தேர்தல் செலவு ஒழுங்குபடுத்தல் சட்டமூலத்தை நிறைவேற்றிக்கொள்ள முடியும் எனவும் தெரிவித்துள்ளது. அதனால் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை உத்தியோகபூர்வ அறிக்கையில் அச்சிடுமாறு உத்தரவிடுகின்றேன் என்றார்.

## தனித்து போட்டியிடவே சு.க தீர்மானம்

குறிப்பாக வடக்கு, கிழக்கிலும் அநுராதபுரம் மாவட்ட உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு கை சின்னத்தின் கீழ் கட்டுப்பணம் செலுத்தப்பட்டுள்ளதுடன், ஏனைய சில பகுதிகளில் கூட்டணியாக செயற்பட தீர்மானிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக ஹெலிகாப்டர் சின்னத்தில் போட்டியிடுவது குறித்து நீண்ட கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்ட போதிலும் அதில் சில கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## சீனா கடும் கண்டனம்

மதத்தலைவர் என்ற போர்வையில் திபெத்தின் ஆன்மீக தலைவர் தலாய்லாமா அரசியல் தலைமறைவு வாழ்க்கை வாழும் ஒருவர், அதேபோல் அவர் சீனாவிற்கு எதிரான பிரிவினைவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார். திபெத்தை சீனாவிலிருந்து பிரிக்க அவர் முயற்சிக்கின்றார். ஆகவே தலாய்லாமா இலங்கைக்கோ அல்லது வேறு எந்த நாட்டிற்கோ விஜயம் மேற்கொள்வதை எதிர்ப்பதாக இலங்கைக்கான சீன தூதரகத்தின் பிரதிநிதிகள் குழுவினர் மகாநாயக்க தேரர்களிடம் தெரிவித்துள்ளனர். சீன அரசாங்கமும் திபெத் மக்கள் உட்பட சீன மக்களும் எந்த பெயரிலும் எந்த வெளிநாடும் தலாய் லாமாவை அழைப்பதை எதிர்க்கின்றனர் என சீன தூதரக அதிகாரி தெரிவித்துள்ளார்.

இந்த சந்திப்பின்போது இருநாடுகளினது மக்களிற்கும் இரு நாடுகளின் பௌத்தமக்களிற்கும் இடையில் பல நூற்றாண்டுகளாக காணப்படும் உறவுகள் குறித்து கருத்துபரிமாறப்பட்டதாக சீன தூதரகம் தெரிவித்துள்ளது. மேலும் கொவிட் நெருக்கடி பொருளாதார நெருக்கடி போன்றவற்றை எதிர்கொள்வதற்காக இலங்கையின் அனைத்து தரப்பினருக்குமான சீனாவின் உதவிகள் குறித்தும் கருத்துபரிமாற்றம் இடம்பெற்றதாக சீன தூதரகம் தெரிவித்துள்ளது.

## 14 நாட்களுக்கு மின்வெட்டு இல்லை

மின்சாரம் வழங்குவதற்கு எப்படியாவது நடவடிக்கை எடுப்பதாக எரிசக்தி அமைச்சர் உறுதியளித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (17) நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், இந்த செயற்பாடானது, ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் நலனுக்காக செய்யப்பட வேண்டிய பணி என்றும், இதற்கமைய, நாடு முழுவதும் உயர்தரப் பரீட்சை ஆரம்பமாகி நிறைவடையும் வரை மின்வெட்டு இடம்பெறாது என்றார். இதற்காக நாளொன்றுக்கு 357 மில்லியன் ரூபாய் வீதம் தொடர்ச்சியாக 14 நாட்கள் மின்சாரம் வழங்குவதற்கு 5 பில்லியன் ரூபாய் செலவாகும் என எரிசக்தி அமைச்சர் தெரிவித்ததாக அமைச்சரவைப் பேச்சாளர் தெரிவித்தார்.

## பேச்சுவார்த்தைகள் வெற்றி

மிகுந்த இக்கட்டான பொருளாதார பின்னணியின் மத்தியிலும் மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, இவ்வருடம் மருந்துகளுக்காக சுமார் 30-40 பில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார். மேலும் அரசாங்கத்தின் முறையான விவசாய கொள்கைக் காரணமாக இம்முறை மேலதிக நெல் அறுவடை கிடைத்திருப்பதாகவும் குறைந்த வருமானம் பெறும் 02 மில்லியன் குடும்பங்களுக்கு தலா மாதாந்தம் 10 கிலோகிராம் அரிசி வீதம் 02 மாதங்களுக்கு வழங்குவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

எமது பொருளாதாரத்தை சரியான பாதையில் கொண்டு வருவதற்கான வேலைத்திட்டங்களை நாம் முன்னெடுத்து வருகின்றோம். கடன் மறுசீரமைப்பு தொடர்பில் தற்போது எமக்கு இந்தியா மற்றும் சீனாவுடன் இணக்கப்பாட்டை எட்ட வேண்டி மட்டுமே உள்ளது. அது தொடர்பான பேச்சுக்களை நாம் முன்னெடுத்து வரும் நிலையில் அப்பேச்சு வார்த்தைகள் வெற்றியளித்திருப்பதாக நான் இந்த சபைக்கு அறிவிக்க முடியும். நாம் எதிர்பார்க்கும் வருமானம் எமக்கு ஒரே தடவையில் கிடைக்க மாட்டாது. இவையனைத்தையும் ஒன்று சேர்த்து எமது வேலைதிட்டத்தை முன்னோக்கி கொண்டு செல்வதையே நாம் எதிர்பார்க்கின்றோம். சம்பளம் வழங்குவது எமது பிரதான செயற்பாடாகும். இண்டாவது இடத்தில் ஓய்வூதியம் வழங்குவது உள்ளது. சமுர்த்தி பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும்.

இவற்றுடன் மேலதிகமாக இன்னும் இரண்டு வேலைதிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் அதேநேரம் அதற்காகவும் நாம் நிதியை பெற்றுக்கொடுக்க வேண்டியுள்ளது. நாம் மருந்துக்காக நிதியைப் பெற்றுக் கொடுப்பதில்லையென தற்போது எம்மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. மேலும் 100 மில்லியன் ரூபா வழங்கப்பட வேண்டும். எனினும் அவசியமான மருந்தை பெற்றுக்கொடுப்பதற்காக நாம் இவ்வருடம் 30-40 பில்லியனை ஒதுக்குவதற்கு எதிர்பார்த்துள்ளோம் எனவும் தெரிவித்துள்ளார்.

## இன்றுமுதல் வேட்புமனு தாக்கல்

உத்தேச உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பாக, 341 உள்ளூராட்சி மன்றங்களில் 340 மன்றங்களுக்கான வேட்புமனுத் தாக்கல் நாளை முதல் ஆரம்பிக்கப்படுமென தேர்தல் ஆணைக்குழு கடந்த 4ஆம் திகதி அறிவித்திருந்தது. உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வேட்புமனுக்கள் தொடர்பான அறிவித்தல் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு கிடைக்கப்பெற்றதையடுத்து, அதற்கேற்ப கட்டுப்பணம் செலுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 18 மாவட்டங்களைச் சேர்ந்த 153 உள்ளூராட்சி மன்றங்களுக்காக அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் தேர்தல் செயலகங்கள் கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

## சீனாவுடன் உடன்படிக்கையா ?

அதன்போது அவர் மேலும் கூறுகையில்,

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமைக்கு நீண்ட காலமாக காணப்பட்ட முறையற்ற பொருளாதார முகாமைத்துவம் காரணமாகியுள்ளது. மக்கள் மீது பொருளாதார சுமைகளை சுமத்தி வரிகளை அதிகரிக்கும் போது, இந்த பொருளாதார நெருக்கடிக்கு காரணமானவர்கள் புத்தகம் எழுதுகின்றனர். பொருளாதார குற்றவாளிகள் சுதந்திரமாக இருக்கும் போது மக்கள் துன்பப்படுகின்றனர்.

இதேவேளை சீனாவுடனான கடன் மறுசீரமைப்பு தொடர்பான பேச்சுவார்த்தை முன்னேற்றமடைந்துள்ளதாக ஜனாதிபதி கூறியுள்ளார். சீனாவுடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை செய்துகொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளதா? அந்த உடன்படிக்கையில் உள்ள விடயங்கள் என்ன? எமது நாட்டு உற்பத்தியாளர்கள் பெரும் அச்சத்திற்குள் தள்ளப்பட்டுள்ளனர். எமது நாட்டில் எஞ்சியுள்ள உற்பத்தி கைத்தொழில் துறைகளும் இல்லாமல் போய்விடுமோ என்ற அச்சம் காணப்படுகின்றது. இதனால் உடன்படிக்கைக்கு முன்னர் இந்த பாராளுமன்றத்தில் கலந்துரையாடுவோம். இதனால் சீனாவுடன் செய்துகொள்ளப்படவுள்ள சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் தற்போதைய நிலை என்ன என்று நான் கேட்கின்றேன் என்றார்.

## ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த இணக்கம்

மூன்று தசாப்த மோதல்கள் முடிவுக்கு வந்த பின்னர் அடைந்துள்ள சமாதானத்தை முற்கொண்டு செல்லல் மற்றும் பாதுகாத்தலுக்காக அர்த்தமுள்ள வழிமுறையாக உண்மையைக் கண்டறியும் சுயாதீனமான, உள்ளூர் பொறிமுறையொன்றை அறிமுகப்படுத்த வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ள நிலையில், மோதல்கள் முடிவுக்கு வந்த பின்னர் மீளிணைப்புப் பற்றித் தேடி ஆராய்வதற்காக இலங்கையில் சுயாதீன ஆணைக்குழுக்கல் சில தாபிக்கப்பட்டுள்ளன. குறித்த ஆணைக்குழுக்களின் பரிந்துரைகளை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டியுள்ளது எனவும் இணங்கியுள்ளனர்.




பா. நிரோஸ்

ddnirosh@gmail.com


கட்டுப்பணம் விவகாரம் தொடர்பில்

# அமைச்சரவையில் தீர்மானம் எடுக்கப்பட்டதா ?



மாவட்ட செயலாளர்கள் கட்டுப்பணம் ஏற்றல் பணியில் இருந்து விலகுமாறு அரச நிர்வாக அமைச்சின் செயலாளர் வெளியிட்ட சுற்றறிக்கைக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன ஆகியோர் அமைச்சரவையின் செயலாளருக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்கள். கட்டுப்பணம் விவகாரம் தொடர்பில் அமைச்சரவையின் ஏதும் தீர்மானம் எடுக்கப்பட்டதா என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க ஆளும் அமைச்சரவை அமைச்சர்களிடம் கேள்வி எழுப்பினார்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் நடவடிக்கைளை தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு முன்னெடுத்துள்ள நிலையில் தேர்தல் நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் அரசாங்கம் செயல்படுகிறது என்பதை அரச நிர்வாக அமைச்சின் செயலாளர் வெளியிட்ட சுற்றறிக்கை உறுதிப்படுத்தியுள்ளது. 2023.01.09 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைய உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்காக கட்டுப்பணம் ஏற்றல் பணியில் இருந்து விலகுமாறு சகல மாவட்ட செயலாளர்களும் அரச நிர்வாக அமைச்சின் ஊடாக அறிவிக்கப்படுகிறது என அரச நிர்வாக அமைச்சின் செயலாளர் சுற்றறிக்கை கடந்த 10 ஆம் திகதி சுற்றறிக்கை வெளியிட்டார்.

இந்த சுற்றறிக்கைக்கு எதிராக தேசிய தேர்தல்கள் ஆணையாளர் சகல மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிகளுக்கு அறிக்கை வெளியிட்டதை தொடர்ந்து அரச நிர்வாக அமைச்சின் செயலாளர் குறித்த சுற்றறிக்கையை மீளப் பெற்றுக் கொண்டார். மாவட்ட செயலாளர்கள் கட்டுப்பணம் செலுத்தல் பணியில் இருந்து விலக வேண்டும் என்ற தீர்மானம் அமைச்சரவையில் எடுக்கப்பட்டது என அமைச்சரவையின் செயலாளர் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவருக்கு அறிவித்துள்ளார். ஆனால் அமைச்சரவையில் அவ்வாறான தீர்மானம் ஏதும் எடுக்கப்படவில்லை என்று விடயதானத்திற்கு பொறுப்பான அமைச்சர் குறிப்பிடுகிறார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன ஆகியோர் மாவட்ட செயலாளர்கள் கட்டுப்பணம் ஏற்றல் பணியில் இருந்து விலக வேண்டும் என்ற ஆலோசனையை அமைச்சரவையின் செயலாளருக்கு வழங்கியுள்ளார்,இந்த ஆலோசனை அரச நிர்வாக அமைச்சின் செயலாளர் ஊடாக செயற்படுத்தப்பட்டு,தற்போது உண்மை வெளியாகியுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

**ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க,ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன ஆகியோர் அமைச்சரவையின் செயலாளருக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்கள்**

மார்ச் 24 ஆம் திகதிக்கு முன்னர்

# 34,000 ஆசிரியர் நியமனங்கள்

## தமிழ் மொழிமூல பாடசாலை ஆசிரியர்களின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை

நாடளாவிய ரீதியிலுள்ள தமிழ் மொழி மூலமான பாடசாலை ஆசிரியர்களின் வெற்றிடங்களை எதிர்வரும் ஏப்ரல் மாதத்திற்குள் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அத்துடன் எதிர்வரும் மார்ச் 24 ஆம் திகதிக்கு முன்னர் 34000 ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்படும் என கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

நாடளாவிய ரீதியிலுள்ள தமிழ் மொழி மூலமான பாடசாலை ஆசிரியர்களின் வெற்றிடங்கள் குறித்து தமிழ் மொழி மூலமான பாடசாலைகளில் தகவல்கள் திரட்டும் நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதால் அது நிறைவடைந்ததும் எதிர்வரும் ஏப்ரல் முதலாம் திகதிக்கு முன்னர் அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்பும் வகையில் 26,000 பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் கல்வியியற் கல்லூரிகளில் பயிற்சி பெற்ற 8.000 ஆசிரியர்களையும் இணைத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மூன்றாம் தவணை நிறைவடைவதற்கு முன்பதாக எதிர்வரும் மார்ச் 24 ஆம் திகதிக்கு முன்னர் அந்த நியமனங்களை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.



இந்த வருடத்தில் ஆசிரிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சரவை அனுமதி உட்பட அனைத்து அனுமதியும் கிடைத்துள்ளது. அதற்கிணங்க மத்திய அரசாங்கத்தின் கீழ் இயங்கும் பாடசாலைகள் மற்றும் மாகாண சபைக்கு உட்பட்ட பாடசாலைகளில் நிலவும் அனைத்து வெற்றிடங்களையும் நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

களுத்துறை மாவட்டத்தில் தமிழ் மொழி மூல பாடசாலைகளில் பல வருடங்களாக ஆசிரியர்கள் பற்றாக்குறை நிலவுவதை நாம் அறிவோம். அவற்றை நிவர்த்தி செய்யும் வகையில் தகவல்களைப் பெற்றுக் கொள்ளும் நடவடிக்கைகளை நாம் ஆரம்பித்துள்ளோம். அந்த நடவடிக்கைகள் நிறைவு பெற்றதும் களுத்துறை மாவட்ட தமிழ் மொழி மூல பாடசாலைகளிலும் நிலவும் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

# 500 மில்லியன் ரூபாய் நட்டஈடு கோரி வழக்கு



தனக்கு சொந்தமான காணியில் கஞ்சா பயிர்செய்கை செய்வதாக பொய்யான செய்தி வெளியிட்ட தேசிய பத்திரிகை பிரதானிகளை பாராளுமன்ற சிறப்புரிமை குழுவிற்கு அழைக்குமாறு சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்த பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஸ, சமூக வலைத்தளங்கள் மற்றும் தேசிய பத்திரிகைகளில் வெளியாகியுள்ள. இது தொடர்பான செய்தி முற்றிலும் அடிப்படையற்றது. எனவே பொய் செய்தி வெளியிட்ட தரப்பிரனரிடமிருந்து 500 மில்லியன் ரூபா நஷ்டஈடு கோரி வழக்குத் தாக்கல் செய்ய தீர்மானித்துள்ளதாகவும் கூறினார்.

எனக்கு சொந்தமான காணியில் எனது மேற்பார்வையின் கீழ் கஞ்சா பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சமூக வலைத்தளங்களிலும், ஒருசில தேசிய பத்திரிகைகளிலும் உறுதிப்படுத்தப்படாத செய்திகள் வெளியாகியுள்ளன. இந்த செய்தி முற்றிலும் அடிப்படையற்றது. இந்த போலி செய்தியால் பாராளுமன்றத்தின் கௌரவத்திற்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. திட்டமிட்ட வகையில் பாராளுமன்றத்தையும், அரசியல் கட்டமைப்பையும் மலினப்படுத்தும் வகையில் செய்தி வெளியிடும் தரப்பினருக்கு இந்த செய்தி சாதகமாக காணப்படுகிறது.

என்னைப்பற்றி பொய்யான செய்தி வெளியிட்ட செய்தி நிறுவனங்களுக்கு எதிராக 500 மில்லியன் ரூபா நஷ்டஈடு கோரி வழக்கு தாக்கல் செய்யவுள்ளேன். என்னைப்பற்றி வெளியான செய்தியில் பாதுகாப்பு தரப்பின் உயர் அதிகாரி ஒருவர் தகவல் வழங்கியதாக குறிப்பிடப்படுகிறது. யார் அந்த உயர் அதிகாரி என்பது குறிப்பிடப்படவில்லை. ஆகவே இச்செய்தியால் நான் உளவியல் ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளேன். எனது தரப்பு நியாயத்தை வெளிப்படுத்துவது அவசியம், ஆகவே இந்த செய்தியை வெளியிட்ட ஊடக நிறுவன பிரதானிகளை பாராளுமன்ற சிறப்புரிமை குழுவிற்கு அழைக்குமாறு சபாநாயகரிடம் கோரிக்கை விடுக்கிறேன் என்றார்.

பெருந்தோட்ட தரிசு காணிகளை

# அரசாங்கம் சுவீகரிக்க வேண்டும்

பெருந்தோட்டங்களில் உள்ள தரிசு காணிகளை அரசாங்கம் சுவிகரிப்பதற்கான சட்டத் திருத்தம் ஒன்றைக் கொண்டுவர வேண்டுமென தெரிவிக்கும் பெருந்தோட்டத்துறை அமைச்சர் ரமேஷ் பத்திரண, எந்தவொரு அரசாங்கம் இச்சட்டத்தைக் கொண்டுவந்தாலும் அதற்கு ஆதரவளிப்பேன் எனவும் தெரிவித்தார். பெருந்தோட்ட மக்களுக்கு அவசியமான உட்கட்டமைப்பு வசதிகளை மேற்கொள்வதாக இருந்தால் பெருந்தோட்ட நிறுவனங்களின் அனுமதியுடனேயே அவற்றை மேற்கொள்ள முடியும் எனவும் அமைச்சர் பதிலளித்தார்.

அரசாங்கத்தின் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை பெருந்தோட்டப் பகுதிகளில் மேற்கொள்வதற்கு எந்த விதமானத் தடைகளும் இல்லை எனவும் தெரிவித்த அமைச்சர், முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க



பிரேமதாஸவால் 1992ஆம் ஆண்டு செய்துகொள்ளப்பட்ட மோசமான ஒப்பந்தம் ஊடாக தோட்டங்கள் பெருந்தோட்டக் கம்பனிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

பெருந்தோட்டக் கம்பனிகள் தோட்டங்களை முறையாகப் பராமரிப்பதில்லை. குறிப்பாக தோட்டப் பகுதிகளில் காணப்படும் தரிசு நிலங்களை மீள அரசாங்கம் சுவிகரித்து தோட்ட மக்களுக்கும் அரசாங்கத்தின ஏனைய வேலைத்திட்டங்களுக்கும் பயன்படுத்த வேண்டும். இதற்கு தேவையான சட்டத்திருத்தங்கள் கொண்டுவரப்பட்டு அவற்றை சட்டமாக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

சுற்றறிக்கைக்கு

# நான் ஆலோசனை வழங்கவில்லை

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரை பதவி நீக்க முடியாது, அவர் வெளியிட்ட சுற்றறிக்கையை அன்றைய தினமே மீளப் பெற்றுக்கொண்டார் என பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

உள்ளூராட்சிசபைத் தேர்தல் தொடர்பில் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானம் எடுக்க வேண்டும். இருப்பினும் நாட்டின் நிலைமை தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கும்,அமைச்சரவைக்கும் உண்டு. நாட்டின் நிதி நிலைமை தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. உள்ளூராட்சிசபைத் தேர்தலை நடத்த தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு ஆரம்பக்கட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.



கட்டுப்பணம் செலுத்தும் பணியில் இருந்து மாவட்ட செயலாளர்களை விலகுமாறு அமைச்சரவையில் எவ்வித தீர்மானங்களும் எடுக்கப்படவில்லை. பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் வெளியிட்ட சுற்றறிக்கைக்கு நான் ஆலோசனை வழங்கவில்லை. வெளியிட்ட சுற்றறிக்கையை செயலாளர் அன்றைய தினமே மீளப் பெற்றுக்கொண்டார். தவறான தகவல்களை அடிப்படையாக கொண்டு எதிர்தரப்பினர் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கிறார்கள் என்றார்.

முதல் காலாண்டுக்குள்

# ஐ.எம்.எப் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ள முடியும்



2023 ஆம் ஆண்டின் முதல் காலாண்டு பகுதிக்குள் சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று சபையின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ள முடியும். பிரதான நிலை கடன் வழங்குநர்களுக்கு அவர்களின் கடன்களுக்காக காப்புறுதி வழங்குவது தொடர்பில் உரிய தரப்புக்களுடன் பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதற்காக அரசு பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது. தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண திறந்த சர்வதேச நிதி சந்தையில் ஒத்துழைப்புக்களை பெற்றுக்கொள்ள முடியாது. சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்வது இறுதி இலக்காக உள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்ட பேச்சுவார்த்தை சாதகமாக உள்ளது. பிரதான நிலை கடன் வழங்குநர்களுக்கு அவர்களின் கடன்களுக்காக காப்புறுதி வழங்குவது தொடர்பில் உரிய தரப்புக்களுடன் பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2023 ஆம் ஆண்டு முதல் காலாண்டுக்குள் சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று சபையின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்ள முடியும் என எதிர்பார்த்துள்ளோம். நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொண்டால் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தும் அடுத்தக்கட்ட திட்டங்களையும் முன்னெடுக்க முடியும் என்றார்.

**தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண திறந்த சர்வதேச நிதி சந்தையில் ஒத்துழைப்புக்களை பெற்றுக்கொள்ள முடியாது**

# மசாஜ் சட்டம் உண்மையில்லை

ஆண்களுக்கு ஆண்களும், பெண்களுக்கு பெண்களும் மட்டுமே மசாஜ் கடமைகளில் ஈடுபட முடியும் என்ற வகையில் சட்டம் கொண்டுவரப்படவுள்ளதாக வெளிவரும் செய்திகளில் உண்மையில்லையென சுதேச வைத்திய இராஜாங்க அமைச்சர் சிசிர ஜெயக்கொடி தெரிவித்தார்.

ஆண்களுக்கு ஆண்களும், பெண்களுக்கு பெண்களும் மட்டுமே மசாஜ் கடமைகளில் ஈடுபட முடியும் என்ற வகையில் சட்டம் கொண்டுவரப்படவுள்ளது. இதற்காக பல்வேறு வழிகளில் சட்டம் இயற்றப்படும் என ஆயுர்வேத ஆணையாளர் நாயகம் தம்மிக்க அபேகுணவர்தன தெரிவித்துள்ளார். மசாஜ் நிலையங்கள் மூலம் எய்ட்ஸ் உள்ளிட்ட பாலியல் ரீதியான நோய்கள் பரவலாக பரவி வருவதால் இந்த சட்டம் இயற்றப்படுவதாக ஆணையர் கூறுகிறார் என்ற வகையில் ஊடகங்களில் செய்திகள் வெளிவந்துள்ளன. இந்த செய்தியில் எந்தவித உண்மையும் கிடையாது. அவ்வாறு எந்த சட்டமும் கொண்டுவரப்படவில்லை. அதுமட்டுமன்றி ஆயுர்வேத ஆணையாளர் நாயகம் என்று எவருமே இல்லை. சுற்றுலா பயணிகளை குழப்பும் வகையில் இவ்வாறான செய்திகள் திட்டமிட்டு வெளியிடப்படுகின்றன என்றார்.

**ஆயுர்வேத ஆணையாளர் நாயகம் என்று எவருமே இல்லை.**

2023 ஆண்டின்

# முதலாவது சட்டமூலத்தை சபாநாயகர் சான்றுரைப்படுத்தினார்

2023ஆம் ஆண்டின் முதலாவது சட்டமூலத்தில் சபாநாயகர் நேற்று (17) தனது கையொப்பத்தையிட்டு சான்றுரைப்படுத்தினார். குத்தகைக்கு கொடுக்கப்பட்ட வளவுகளின் உடைமையை மீளப்பெறுதல் சட்டமூலத்தையே சபாநாயகர் இவ்வாறு சான்றுரைப்படுத்தினார்.

குத்தகை உடன்படிக்கையொன்றின் கீழ் குத்தகைக்குக் கொடுக்கப்பட்ட வளவுகளின் உடைமையை மீளப்பெறுதல் தொடர்பான நடவடிக்கை முறைக்காக ஏற்பாடு செய்வதற்கும், குத்தகை,



வாடகைகள், சேவை விதிப்பனவுகள் மற்றும் ஒழித்துக் கட்டப்பட்ட சேதவீடுகளின் நிலுவைகளை அறவிடுவதற்கான ஒழுங்குபடுத்துவதற்கும், அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்காக ஏற்பாடு செய்வதற்காக இந்தச் சட்டமூலத்தின் ஊடாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட சட்டமூலம் கடந்த ஜனவரி 05ஆம் திகதி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. சபாநாயகர் இச்சட்டமூலத்தை சான்றுரைப் படுத்தியதைத் தொடர்ந்து இது 2023ஆம் ஆண்டு 01ஆம் இலக்க குத்தகைக்குக் கொடுக்கப்பட்ட வளவுகளின் உடைமையை மீளப்பெறுதல் சட்டமாக நேற்று (17) முதல் நடைமுறைக்கு வருகிறது.

**சட்டமூலம் கடந்த ஜனவரி 05ஆம் திகதி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.**

தமிழ்க் கட்சிகளிடம் ஒற்றுமை இன்மையால்

# ஒதுங்கியிருக்க முடிவு

## தமிழர் சம உரிமை இயக்கம் அறிக்கை

■ நிதர்சன் விநோத்

தமிழ்த் தேசிய அரசியலில் தமிழ்க் கட்சிகள் பிளவுபட்டு, தமிழ்க் கட்சிகளின் ஒற்றுமைத்தன்மை ஏமாற்றமளித்துள்ளமையால் தமிழர் சம உரிமை இயக்கம், கட்சி அரசியலில் இருந்து ஒதுங்கி இருப்பதற்கு முடிவு எடுத்துள்ளதாக, அதன் பொதுச் செயலாளர் வலி.வடக்கு பிரதேச சபை உறுப்பினர் தா. நிகேதன் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது;

2009 இற்கு பின்னரான கள யதார்த்த சூழலில் தமிழ்த் தேசிய அரசியலில் ஈடுபடும் தரப்புகள், தமிழ் மக்களின் அபிலாஷைகளை குழிதோண்டிப் புதைக்க முற்பட்டிருக்கின்றார்கள். இவ்வாறான சூழ்நிலையிலேயே, 2018ஆம் வருட உள்ளூராட்சி தேர்தலில் தமிழர் சம உரிமை இயக்கம், சில அரசியல் கட்சிகள், அமைப்புகளுடன் இணைந்து தமிழ்த் தேசிய பேரவையாக வடக்கு - கிழக்கு எங்கும் போட்டியிட்டது.

தற்போது தமிழ்க் கட்சிகளிடம் இருந்த ஒற்றுமை சீர்குலைந்து, தனித்தனி அணிகளாகப் பிரிந்து போட்டியிடுகின்றமை கவலையளிக்கின்றது. எந்த நோக்கத்துக்காக தமிழ்த் தேசிய பேரவையாக இணைந்து போட்டியிட்டோமோ அந்த நோக்கங்கள் எட்டப்படாமல் போனமை ஏமாற்றமளிக்கின்றது. தமிழ்க் கட்சிகள் சிறு சிறு அணிகளாக பிரிந்தமையானது, தமிழர்களின் பேரம்பேசும் சக்தியை நலிவடையச் செய்துள்ளது. இதனால் தமிழ் மக்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகி உள்ளது.

இவ்வாறான களச்சூழலில் தமிழர் சம உரிமை இயக்கத்தின் மத்திய குழு கூடி ஆராய்ந்து பத்தோடு பதினொன்றாக பயணத்தை தொடர்வதில்லை என தீர்மானித்தது. இதனால், கட்சி அரசியலில் இருந்து ஒதுங்கி, எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் எந்த வேட்பாளர்களையும் களமிறக்குவதில்லை எனவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

எனினும், தமிழ் மக்களின் சரிநிகர் சமான வாழ்வுக்கும் இனத்துவ அடையாளங்களைப் பாதுகாக்கும் பணியிலும், மக்கள் இயக்கமாக நாம் தொடர்ந்தும் செயற்படுவோம் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

பிரதேச சபை உறுப்பினருக்கு கொலை அச்சுறுத்தல்

## முள்ளியவளை பொலிஸில் முறைப்பாடு

■ சண்முகம் தவசீலன்



முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைத்துறைப்பற்று பிரதேச சபையின் உறுப்பினர் சின்னராசா லோகேஸ்வரனுக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக முள்ளியவளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த பிரதேச சபை உறுப்பினருக்கு, அரச உத்தியோகத்தரால் விடுக்கப்பட்ட கொலை அச்சுறுத்தல் தொடர்பாக நேற்று (17) காலை முள்ளியவளை பொலிஸ் நிலையம் சென்ற பிரதேச சபை உறுப்பினர், தனக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்தவரின் பேரையும் ஆதாரத்தையும் காட்டி முறைப்பாட்டைப் பதிவு செய்துள்ளார்.




## ‘இடர்சுமந்த மேனியர்’ நூல் வெளியீடு

■ செ. கீதாஞ்சன்

‘முல்லை முகுந்தினி’ என அழைக்கப்படும் எழுத்தாளரின் ‘இடர் சுமந்த மேனியர்’ எனும் நூல் நேற்று முன்தினம் (16) மல்லாவியில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

மல்லாவி தொழில்நுட்ப கலை கலாசார மற்றும் பெண்கள் மேம்பாட்டு அமையத்தில் ஆசிரியரும் அகில இலங்கை சமாதான நீதவானுமான பி. விஜயலலிதா தலைமையில் நடைபெற்ற வெளியீட்டு நிகழ்வில், நூலின் முதற்பிரதியை பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன் வெளியிட்டு வைக்க, ஒளிரும் வாழ்வு அமையத்தலைவர் ஜெ. சுதாநாதன் பெற்றுக்கொண்டதை தொடர்ந்து, சிறப்பு பிரதிகள் வருகைதந்த பிரமுகர்களால் வழங்கிவைக்கப்பட்டன.

## யாழ். பல்கலைக்கழகத்தின் பொங்கு தமிழ்

■ நிதர்சன் விநோத்

யாழ். பல்கலைக்கழகத்தில் பொங்கு தமிழ் பிரகடனத்தின் 22ஆம் ஆண்டு நிறைவு நாள் நேற்று (17) நினைவு கூரப்பட்டது.

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர், மாணவர்கள், இணைந்து பல்கலைக்கழக கலைப்பீட வளாகத்துக்குள் உள்ள பொங்குதமிழ் நினைவு தூபி முன்னால் கூடி, பொங்குதமிழ் பிரகடன நிறைவு நாளை நினைவு கூர்ந்தனர்.

இந்த எழுச்சி நிகழ்வில் வைத்து, பொங்குதமிழ் பிரகடனம் வாசிக்கப்பட்டது. தமிழ் மக்களின் அபிலாஷைகளான சுயநிர்ணைய உரிமை, மரபுவழித் தாயகம், தமிழ்த் தேசியம் என்பவை அங்கிகரிக்கப்பட வேண்டும் என்பது பொங்குதமிழ் பிரகடனமாகும்.





மாங்குளம் மகாவித்தியாலய மாணவர்கள்

## அதிபரை நியமிக்க கோரி ஆர்ப்பாட்டம்

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

முல்லைத்தீவு மாவட்டம், துணுக்காய் கல்வி வலையத்துக்கு உட்பட்ட மாங்குளம் மகாவித்தியாலய மாணவர்கள் நேற்று (17) காலை ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளனர்.

கடந்த 30 மாதங்களாக குறித்த பாடசாலைக்கு நிரந்தர அதிபர் இல்லாத நிலையில், நிரந்தர அதிபரை நியமிக்க கோரியே குறித்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றிருந்தது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் ‘உடன் தீர்வு இல்லையெனில் போராட்டம் வலுப்பெறும்’, ‘எங்கே எங்கே எமது பாடசாலை அதிபர் எங்கே’, ‘தரமுயர்ந்த பாடசாலைக்கு தரமான அதிபர் வேண்டும்’, ‘துணுக்காய் கல்வி வலயம் அதிபர் இல்லாத 1AB பாடசாலையா’, ‘அருகில் வலயம் அனாதையாக பாடசாலை’ போன்ற சுலோகங்கங்களை ஏந்தி போராட்டத்தில் ஈடுபட்டனர்

இதேவேளை, சம்பவ இடத்துக்கு வருகை தந்த மாங்குளம் பொலிஸார், மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் இடம்பெற ஒத்துழைக்குமாறும் இதற்கான தீர்வைத் தாம் பெற்றுத் தருவதாகவும் வழங்கிய உறுதி மொழியையடுத்து மாணவர்கள் கலைந்து சென்று, கற்றல் நடவடிக்கையைத் தொடர்ந்தனர்.



## பட்டிப் பொங்கல்

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

இலங்கை இந்து ஒன்றியம், பச்சிலைப்பள்ளி வர்த்தக சங்கம், 552ஆவது இராணுவத்தின் காலால் படை ஆகியோர் இணைந்து நடத்திய வடமாகாண பட்டிப் பொங்கல், பளை நகரத்தில் நேற்று (17) இடம்பெற்றது.

பொங்கல் நிகழ்வில் பாடசாலை மாணவர்களின் கோலம் போடுதல், மாலை கட்டுதல், கிடுகு பின்னுதல், முட்டி உடைத்தல் போன்ற போட்டிகளும் மயிலாட்டம் உள்ளிட்ட கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

150 பாடசாலை மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களும் பயனாளிகள் 150 பேருக்கு தென்னம்பிள்ளைகளும் வழங்கி வைக்கப்பட்டன.

# உண்மையான பிரச்சினையை அரசாங்கம் மூடிமறைக்கிறது

## கமநல அமைப்புகளின் மட்டு. மாவட்ட அதிகார சபை தலைவர்

■ வா. கிருஸ்ணா




இலங்கையில் கடந்த ஆட்சியாளர்கள் அறிமுகப்படுத்திய சேதன உரம், வட்டம் புழு எனப்படும் நிமற்றோடாக் பரவக் காரணமாகி உள்ளதுடன் அரசாங்கம் உண்மையான பிரச்சினையை வெளியே விட அச்சப்படுவதாகவும் கமநல அமைப்புகளின் மட்டக்களப்பு மாவட்ட அதிகார சபை தலைவர் அ. ரமேஸ் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட கமநல அதிகார சபையின் அமைப்பினர் நேற்று (17) மட்டு. ஊடக அமையத்தில் ஊடக சந்திப்பை ஏற்பாடு செய்திருந்தனர். இதன்போது தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்;

கடந்த ஆட்சியாளர்கள் அறிமுகப்படுத்திய சேதன உரத்தைப் பாவித்ததால் ஏற்பட்டுள்ள வட்டப்புழு நோய், வேளாண்மையின் வேரில் முடிச்சுகளை ஏற்படுத்துவதால், அந்த வேரூடாக நீர் அல்லது போசனைகளை உறிஞ்ச முடியாத நிலை ஏற்படுகின்றது.

இந்தக் கிருமியானது நீர் உள்ளநேரம் மேலுக்கு வந்து தாக்கும்; நீர் இல்லாத நேரம் நிலத்துக்கு அடியில் சென்றுவிடும். மட்டக்களப்பு மாவட்டத்தில் இது தொடர்பில் ஆய்வுக்காக வந்தவர்கள் இதைக்கண்டு அச்சம் கொண்டார்கள். இதைப் பெரும் பிரச்சினையெனக் கூறியவர்களின் வாய்கள் தற்போது அடைக்கப்படுகின்றன. ஆனால், இன்று இதனை ‘மஞ்சள் நோய்’ என்ற போர்வையில் 25 மாவட்டங்களிலும் பரவியுள்ளது என்ற கருத்தை அரசாங்கம் தெரிவித்து வருகின்றது என்றார்.

## நேர்முகப் பரீட்சை

■ எம்.எஸ்.எம் ஹனீபா

தேசிய கல்வியல் கல்லூரிக்கு 2023/2024 ஆம் கல்வியாண்டுக்கு புதிதாக அனுமதிக்கப்படவுள்ள ஆசிரிய பயிலுநர்களுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 25 ஆம் திகதி புதன்கிழமை தொடக்கம் அட்டாளைச்சேனை தேசிய கல்வியல் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக, அட்டாளைச்சேனை தேசிய கல்வியல் கல்லூரியின் பீடாதிபதி கே. புண்ணியமூர்த்தி நேற்று (17) தெரிவித்தார்.

இவர்களுக்கான கடிதங்கள் தனித்தனியாக விண்ணப்படிவத்தில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுளளதாகவும் நேர்முகப் பரீட்சைக்கு கடிதம் அனுப்பப்பட்டவர்கள் அதில் குறிப்பிடப்பட்டுள்ள சகல ஆவணங்களுடனும் காலை 09.00 மணிக்கு சமூகமளிக்குமாறும் கேட்டுள்ளார்.

அட்டாளைச்சேனை தேசிய கல்வியியல் கல்லூரிக்கு விஞ்ஞானம் கற்கை நெறிக்கு 57 பயிலுநர்களும், கணித கற்கை நெறிக்கு 57 பயிலுநர்களும், இஸ்லாம் கற்கை நெறிக்கு 20 பயிலுநர்களும், ஆரம்பநெறி கற்கை நெறிக்கு 120 பயிலுநர்களும், விசேட கற்கை நெறிகளுக்கு 60 பயிலுநர்களும், கணக்கியல் மற்றும் வணிகக் கல்விக்கு 30 பயிலுநர்களுமாக மொத்தம் 344 பயிலுநர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளதாகவும் பீடாதிபதி மேலும் தெரிவித்தார்.



## ஐக்கிய பொங்கல் விழா

‘பல்சமயங்களாக ஒன்றிணைந்து உழவர்களுக்கும், இயற்கைக்கும் நன்றி செலுத்துவோம்’ எனும் தொனிப்பொருளில் மட்டக்களப்பு மாவட்ட பல்சமய ஒன்றியத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட பல்சமய ஐக்கிய பொங்கல் விழா, புதுமுகத்துவாரம் காயத்திரி பீட வளாகத்தில் ஞாயிற்றுக்கிழமை (16) திகதி விமரிசையாக நடைபெற்றது. மட்டக்களப்பு எகெட் கரித்தாஸ் நிறுவனத்தின் இயக்குநர் அருட்தந்தை ஏ. இயேசுதாசன் அடிகளார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், பல்சமய ஒன்றியத்தின் செயலாளர் அருட்தந்தை கே.ஜெகதாஸ் அடிகளார், உபதலைவர் மொஹமட் சாஜஹான் மௌலவி, பிள்ளையாரடி ஆஞ்சநேயர் ஆலய பிரதம குரு ஜெகதீஸ்வரக் குருக்கள், அமெரிக்கன் சிலோன் மிசன் குரு முதல்வர் அருட்பணி எம்.லூக்கேயன், ஜெயந்திபுரம் மத்தியஸ்தானத்தின் விகாராதிபதி கட்டஹிரகம தம்மஸ்ரீ, காயத்திரி பீடத்தின் பிரதம குரு சிவஸ்ரீ பீ. கிறிஸ்ணமூர்த்தி குருக்கள், எகெட் கரித்தாஸ் நிறுவனத்தின் சமாதான செயற்றிட்ட இணைப்பாளர் இக்னேசியஸ் கிறிஸ்டி உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

எம்.எஸ்.எம் நூர்தீன்

கல்முனை தமிழ் பிரதேசத்தில்

## சுயேட்சையில் களமிறங்க மக்கள் அபிப்பிராயம்

■ வி.ரி சகாதேவராஜா

கல்முனை தமிழ் பிரதேசங்களில் எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலில், கட்சிகளை விடுத்து, சுயேட்சையில் களமிறங்க தமிழ் மக்கள் கருத்துரைத்துள்ளனர்.

சனிக்கிழமை (14) கல்முனை அம்மன் கோவில் வீதியில் இடம்பெற்ற கூட்டத்தில், கல்முனை பிரதேசத்தைச் சேர்ந்த தமிழ் கிராமங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள். அங்கு மக்கள் மேற்படி அபிப்பிராயத்தை தெரிவித்தனர், மேலும், அங்கு வந்திருந்த மக்கள் கருத்துத் தெரிவிக்கும்போது கூறியதாவது;

தமிழ் தேசிய கூட்டமைப்பு பிளவடைந்ததன் எதிரொலி மற்றும் கடந்த தடவை கருணா அம்மான் வாக்குகளை பெற்ற பின்பு, மக்களை நிர்க்கதியாக விட்டுவிட்டு சென்றமை போன்ற பல விடயங்களை சுட்டிக் காட்டிய மக்கள், இம்முறை இந்தக் கட்சிகளை விடுத்து சுயேட்சையில் போட்டியிட வேண்டும் என்று கருத்தை தெரிவித்தனர்.

இதனை அடுத்து கல்முனை இளைஞர் ஒன்றியம், இரட்டை வட்டாரமான கல்முனை பன்னிரண்டாம் வட்டார மக்களின் அபிப்பிராயங்களை பெறும் கூட்டத்தை ஆலயங்களின் ஒலிபெருக்கி வாயிலாக பகிரங்கமாக அறிவித்து, மாமாங்க பிள்ளையார் ஆலய பல்தேவைக் கட்டடத்தில் ஒன்றியத் தலைவர் ஆறுமுகம் நிமலன் தலைமையில் கூடியது.



## யானையால் பலியானவரின் மனைவிக்கு நட்டஈடு

■ வி.ரி சகாதேவராஜா

யானைத் தாக்குதலில் பலியான குடும்பஸ்தரின் மனைவிக்கு ஒரு இலட்சம் ரூபாய் நட்டஈடு வழங்கப்பட்ட சம்பவம் திருக்கோவில் பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

2023.01.05 ஆம் திகதி தங்கவேலாயுதபுரத்தில் காட்டு யானை தாக்குதலுக்குள்ளாகி மரணம் அடைந்த புவிதராசன் ரசிகரனின் குடும்பத்துக்கு வனஜீவராசிகள் திணைக்களத்தின் ஊடாக, அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு வழங்கியுள்ளது. மொத்த இழப்பீட்டு தொகையான ஒரு மில்லியன் ரூபாயின் முதற்கட்டமாக நேற்று (17) ரூபாய் 100,000/= அவரது மனைவியிடம் திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் வழங்கிவைத்தார்

## மட்டக்களப்புக்கு புதிய அரசாங்க அதிபர்

■ எம்.எஸ்.எம் நூர்தீன்



மட்டக்களப்பு மாவட்டத்தின் புதிய அரசாங்க அதிபராக திருமதி கலாமதி பத்மராஜா நியமிக்கப்பட்டுள்ளார். கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலாளராக கடமையாற்றிய திருமதி கலாமதி பத்மராஜா, மீண்டும் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர், 2020 ஜனவரி தொடக்கம் 2020 அக்டோபர் வரை மட்டக்களப்பில் அரசாங்க அதிபராக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சமயலறையில் புதையல் தோண்டிய மூவர் கைது

■ எப். முபாரக்

கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாத்தியாகம பகுதியில் புதையல் தோண்டிய வீட்டில் உரிமையாளர் உட்பட மூவரை நேற்று முன்தினம் (16) மாலை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து, சம்பவ இடத்துக்குச் சென்ற போது சமையலறையில், 20 அடிவரை தோண்டிக்கொண்டிருந்த போதே கைது செய்யப்பட்டார்கள்.

இறந்த ஒருவர் இந்த இடத்தில் புதையல் இருப்பதாக கனவில் வந்து கூறியதாலேயே குறித்த இடத்தில் புதையல் தோண்டியதாகவும்

அந்த வீட்டில் இதற்கு முன்னரும் புதையல் தோண்டிய போது ஐந்துக்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

# சேவலுடன் கூட்டணி அமைக்கும் திட்டம் இல்லை

## வடிவேல் சுரேஸ் எம்.பி திட்டவட்டமாக கூறினார்

■ ராமு தனராஜா

இலங்கை தொழிலாளர் காங்கிரஸூடன் தான் கூட்டணி அமைக்கவுள்ளதாக வெளிவரும் தகவல்கள் உண்மைக்கு புறம்பானவை என தெரிவித்துள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச்செயலாளருமான வடிவேல் சுரேஷ்,அவ்வாறு எந்தவொரு திட்டமும் தன்னிடம் இல்லை என்றார்.

உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்காக இ.தொ.காவுடன் வடிவேல் சுரேஷ் கூட்டணி அமைக்கவுள்ளார் என அரசியல் வட்டாரங்களில் பரபரப்பாக பேசப்பட்டு வருவதுடன், இதொகா தரப்பில் இருந்தும் இது தொடர்பில் தகவல் கசியவிடப்பட்டிருந்தன.

இந்நிலையில் இது சம்பந்தமாக வடிவேல் சுரேஷிடம் வினவியபோது, அவர் அதனை நிராகரித்தார்.

தேர்தலொன்று நெருங்கும்வேளை தனக்கு எதிராக அவதூறு பரப்பப்படும் போலி சமூக வலைத்தளங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.



# அஸ்கிரிய விகாரைக்கு அருகில் விபசார விடுதி சுற்றிவளைப்பு

■ ஷேன் செனவிரத்ன

கண்டி- அஸ்கிரிய தம்மசித்தி மாவத்தையில் உள்ள வீடொன்றில், இரகசியமான முறையில் நடத்தி வரப்பட்ட விபசார விடுதி, சுற்றிவளைக்கப்பட்டு நால்வர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களுள் 3 பெண்களும் விடுதியின் முகாமையாளரும் உள்ளடங்குவதாக கண்டி பொலிஸ் நிலைய ஊழல் ஒழிப்பு பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

நீதிமன்றத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட அனுமதியுடன் சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

முகாமையாளரைக் கைதுசெய்யும் போது, அவரிடமிருந்து ஐஸ் போதைப் பொருளும் கைப்பற்றப்பட்டுள்ளது.

அஸ்கிரிய விகாரை மற்றும் பிரதான பாடசாலைக்கு அருகில் வாடகை அடிப்படையில் மொரட்டுவ பிரதேசத்தைச் சேர்ந்த நபர் ஒருவரால் இந்த வீடு கொள்வனவு செய்யப்பட்டு, அங்கு விபசார விடுதி நடத்திச் செல்லப்பட்டுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கைதுசெய்யப்பட்ட பெண்கள் மொரட்டுவ, நுகவெல பிரதேசங்களைச் சேர்ந்த 30- 40 வயதுக்கு இடைப்பட்டவர்கள் என பொலிஸார் தெரிவித்துள்ளதுடன், சந்தேகநபர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவித்தனர்.

### அரசாங்கத்துக்கு எதிராக

# கெலிஓயா நகரில் ஆர்ப்பாட்டம்

■ நவி

கம்பளை, கெலிஓயா நகரில் ஐக்கிய மக்கள் சக்தியின் ஏற்பாட்டில் அரசாங்கத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மின்சாரம், நீர் கட்டணம் அதிகரிப்பு, பொருட்கள் விலைவாசி அதிகரிப்புக்கு எதிராக இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் லக்கி ஜயவர்தன, உடுநுவர பிரதேச சபை தலைவர் காமினி தென்னகோன் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள், பொதுமக்கள் உள்ளிட்டவர்கள் இதில் கலந்துகொண்டு கோஷங்களை எழுப்பினர்.



# ‘சமூக மாற்றத்துக்கு வித்திடல்’ செயற்றிட்டம்

இலங்கையின் முன்னணி சமூக சேவை நிறுவனங்களில் ஒன்றான லங்கா விஷன் ஆக்சன் பவுண்டேஷனின் பிரத்தியேக வேலை திட்டங்களில் ஒன்றான கல்வி சார் சமூகத்தை கட்டி எழுப்பும் செயற்றிட்டத்தின் ஊடாக கண்டி, டி.எஸ்.சேனாநாயக்க பொது நூலகத்திற்கு சுமார் ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதிமிக்க புத்தகங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

குறித்த நிகழ்வில் லங்கா விஷன் ஆக்சன் பவுண்டேஷனின் தலைமை நிர்வாகி திருமதி. கீர்த்தனா தர்ஷன் கலந்து கொண்டதுடன், புத்தகப் பொதிகளை கல்லூரியின் தலைமை ஹேரத்திடம் வழங்கி வைத்தார்.

குறித்த புத்தகப்பொதிகளில் தமிழ், சிங்களம், ஆங்கில மொழிகளிலான கவிதை, சிறுகதை, நாவல்கள்,வரலாற்று நூல்கள் என்பன உள்ளடக்கப்பட்டிருந்தன.







# மூன்றாம் கட்டையில் மாட்டுப்பொங்கல்

மாட்டுப் பொங்கல் தினத்தையொட்டி, கண்டி– ஹந்தான மூன்றாம் கட்டை ஸ்ரீ ராமர் கோவில் வளாகத்தில், 108 பொங்கல் பானைகளில் பொங்கல் பொங்கி, விஷேட பூஜை நிகழ்வுகள் நடைப்பெற்றன. ‘முள் இல்லாத பாதை’ என்ற குழுவினரின் ஏற்பாட்டில் இந்த மாட்டு பொங்கல் நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

(நவி)

# மது போதையில் பஸ்ஸை ஓட்டிய சாரதி கைது

■ செ.தி.பெருமாள்

மது போதையில் இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ்ஸை ஓட்டிச் சென்ற சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி புஷ்பகுமாரவுக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைய, நல்லதண்ணி நகரில் இருந்து ஹட்டன் நோக்கி பஸ்ஸை செலுத்திச் சென்ற சாரதியே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சாரதி, விசாரணைகளின் பின்னர் பொலிஸ் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன் சாரதியை இன்று (18) ஹட்டன் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உத்தரவிடப்பட்டுள்ளதாக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி புஷ்பகுமார தெரிவித்தார்.

# உறுப்பினர்களின் வரவின்மையால் தாமதமான நகர சபைக் கூட்டம்

■ சுதத்.எச்.எம்.ஹேவா

ஹட்டன் - டிக்கோயா நகர சபையின் விசேட சபைக் கூட்டத்தை நேற்று (17) கூட்டுவதற்கு நடவடிக்கை எடுத்திருந்த நிலையில், குறித்த கூட்டத்திற்கு உறுப்பினர்கள் உரிய முறையில் பங்கேற்காத காரணத்தால், குறித்த நேரத்தை விட ஒரு மணித்தியாலம் தாமதமாக கூட்டம் நடைபெற்றுள்ளது.

16 உறுப்பினர்களைக் கொண்ட இச்சபையில் நேற்று நடைபெறவிருந்த கூட்டத்திற்கு, தவிசாளர் சடையன் பாலச்சந்தரின் உடல்நிலை சரியில்லாத காரணத்தால், உபதவிசாளரின் முயற்சியால் காலை 10 மணிக்கு கூட்டத்தை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

ஆனால், பேரவை முழுமை பெற குறைந்தபட்சம் ஆறு பேர் பங்கேற்க வேண்டும் என்பதால், பேரவை கூட்டத்திற்கு வந்திருந்த உப தவிசாளர் உட்பட நான்கு பேர் மாத்திரமே சபையில் காணப்பட்டதால் உரிய நேரத்தில் கூட்டத்தை ஆரம்பிப்பதில் சிக்கல் ஏற்பட்டது.

பின்னர் 11.00 மணியளவில் மேலும் இரு உறுப்பினர்களின் வருகையுடன் உப தவிசாளர் ஏ.ஜே.எம் பார்மிஸ் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

# கேகாலையில் பொங்கல்

கேகாலை மாவட்ட செயலகத்தின் கலாசார பிரிவினரால் தைப் பொங்கல் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மாவட்ட செயலக வளாகத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில், மாவட்ட செயலாளர் சரிதா இலங்ககோன் தலைமையில் நடைபெற்றது. (என். ஆராச்சி)





# சில்வெஸ்டர் கல்லூரியின் பாதுகாப்பு ஊழியர் கொலை

■ ஷேன் செனிரதன்

கண்டி, புனித சில்வெஸ்டர் கல்லூரியின் விளையாட்டு மைதானத்துக்கு பொறுப்பான பாதுகாப்பு ஊழியர், கொலை செய்யப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்.

பண்டாரகம பிரதேசத்தைச் சேர்ந்த 26 வயதுடைய இளைஞரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்று (17) அதிகாலை 5 மணியளவில் மைதானத்துக்கு வருகைத் தந்த பாடசாலை மாணவன் ஒருவர் பாதுகாப்பு ஊழியர் கை, கால் கட்டப்பட்ட நிலையில் இருப்பதைக் கண்டு ஏனையவர்களுக்கு அறிவித்துள்ளார்.

இதையடுத்து சம்பவ இடத்துக்கு வருகைத் தந்த பொலிஸார் இவரது கொலைக்கான காரணம் குறித்து விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.




### கேகாலையில் நேற்று வரை

# 5 கட்சிகளும் 3 சுயேட்சை குழுக்களும் கட்டுப்பணத்தை செலுத்தின

■ என்.ஆராச்சி

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கேகாலை மாவட்டத்தில் 7,00087 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர் என கேகாலை உதவி தேர்தல் ஆணையாளர் சஜித் கஸ்தூரிசிங்க தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, கேகாலை மாவட்டத்தில் 12 உள்ளூராட்சி மன்றங்களுக்கான உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இதேவேளை நேற்று வரை (17) கேகாலை மாவட்டத்தில் 5 பிரதான கட்சிகளும் 3 சுயேட்சை குழுக்களும் கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

### ஐ.தே.கட்சி நுவரெலியாவில்

# கட்டுப்பணத்தை செலுத்தியது

■ எஸ்.கணேசன்

ஐக்கிய மக்கள் சக்தி நுவரெலியா மாவட்டத்தில் உள்ளூராட்சிமன்ற தேர்தலுக்கான கட்டுப்பணத்தை நேற்று முன்தினம் (16) செலுத்தியது.

காலை 10 மணியளவில் நுவரெலியா மாவட்ட தேர்தல் அலுவலகத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா தொகுதி அமைப்பாளர் தினேஷ் லங்கா கீகனகே மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் அங்கத்தவர்கள் உள்ளடங்கிய குழு கட்டுப்பணத்தை செலுத்தியது.

நுவரெலியா மாவட்டத்தில் உள்ள நுவரெலியா மாநகர சபை மற்றும் நுவரெலியா பிரதேச சபை ஆகிய இரண்டு சபைகளுக்கும் ஐக்கிய மக்கள் சக்தி போட்டியிடவுள்ள நிலையில், இரண்டு சபைகளுக்கான கட்டுப்பணம் செலுத்தப்பட்டதாக ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா தொகுதி அமைப்பாளர் தினேஷ் லங்கா கீகனகே தெரிவித்தார்.



# தீர்ப்புக் கிடைத்தாலும் பொறுப்புக்கூறல் இன்னமும் பூர்த்தியடையவில்லை

2019ஆம் ஆண்டு இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் போது உயிரிழந்தவர்களின் குடும்பத்தாருக்காக நட்டஈடு வழங்குமாறு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும், பாதுகாப்புத் தரப்பில் உயர் பொறுப்பு வகித்த நான்கு அதிகாரிகளுக்கு உயர்நீதிமன்றம் கடந்த வாரம் தீர்ப்பளித்திருந்தது.

தாக்குதல் பற்றி முன்கூட்டியே அறிந்திருந்த போதிலும், அதனை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை தொடர்பில் இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தது. தமது சொந்தப் பணத்திலிருந்து இந்த நட்டஈட்டை வழங்க வேண்டுமென இந்தத் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டிருந்தமை கவனத்தில் கொள்ள வேண்டும்.

தேசிய பாதுகாப்புக்கு பொறுப்பாக இருந்த முன்னாள் ஜனாதிபதி மற்றும் அவரது அணியினர் ஆகியோர் இந்தத் தாக்குதல் தவிர்க்கப்படாமை தொடர்பில் பொறுப்புக்கூறல் தொடர்பில் முக்கிய திருப்பு முனையாகவும், இந்தத் தாக்குதல் தொடர்பில் இதுவரையில் முதன் முறையாக நீதிசார் தீர்ப்பொன்று வெளியாகி உள்ளமையும் குறிப்பிடத்தக்கது. தாக்குதல்களால் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தார் எழுப்பியிருந்த அடிப்படை உரிமை மீறல் தொடர்பான வழக்கில் இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டமை தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, சில தினங்களுக்கு முன்னர் கருத்து வெளியிடுகையில், தாம் இந்தத் தீர்ப்பை ஏற்றுக் கொள்வதாகவும், ரூ. 100 மில்லியன் நட்டஈட்டை செலுத்தும் வகையில் தம்வசம் போதியளவு சொத்துகள் அல்லது வருமானம் இல்லை. தாம் தமது நண்பர்கள் மற்றும் நலன்விரும்பிகளிடமிருந்து கோரி, இந்த நிதியைத் திரட்டி செலுத்த எதிர்பார்ப்பதாக குறிப்பிட்டிருந்தார்.

இவரது இந்த அறிக்கையின் பின்னணியில் மிகவும் பாரதூரமான உள்ளர்த்தங்கள் காணப்படுகின்றன. நாட்டின் உயர்பொறுப்பை வகித்திருந்து, தேசிய பாதுகாப்பை உறுதி செய்யும் பொறுப்பை தம்வசம் கொண்டிருந்த நிலையில், இடம்பெற்ற இந்தத் தாக்குதலுக்கு, குற்றவாளியாக உயர்நீதிமன்றத்தால் இனங்காணப்பட்டு, தற்போது தண்டனை விதிக்கப்பட்டுள்ள நிலையில், இவர் தமது நண்பர்களிடமிருந்து இந்த நிதியைத் திரட்டுவதாக தெரிவிப்பது, ஓர் அரசியல்வாதி எனும் வகையில், இவர் பெற்றுக் கொள்ளும் இந்த நிதிக்காக, எதிர்காலத்தில் இவரின் நண்பர்களுக்கு பிரதியுபகாரமாக எவ்வாறான அரசியல் அனுகூலங்களை வழங்குவார் எனும் கேள்வி எழுகின்றது.

அத்துடன், உயிர்த்த ஞாயிறு எனும் புனிதமான தினத்தன்று, மத வழிபாடுகளுக்காக சென்று இறைவனிடம் மன்றாடிய நிலையில் 260 க்கு மேற்பட்ட உயிர்களைக் காவு கொண்ட மனிதப் படுகொலைச் சம்பவம் இடம்பெறுவதற்கு, இரண்டு கிழமைகளுக்கு முன்னரே நாட்டின் பாதுகாப்புப் பிரதானிகள் அறிந்திருந்தும், அத்தாக்குதலை தவிர்க்க நடவடிக்கை எடுக்கத் தவறியமைக்கு, சம்பவம் இடம்பெற்று சுமார் நான்கு ஆண்டுகள் கழிந்த பின்னர், இவ்வாறான நட்டஈட்டுடன் தொடர்புடைய தண்டனை வழங்குவது, எதிர்காலத்தில் நாட்டின் தலைமைப் பொறுப்பை ஏற்பவர்களுக்கும், இதே போன்ற தவறுகளை இழைப்பதற்கு ஏதுவான காரணியாக அமைந்துவிடலாம்.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

சோதனைகள் இன்றி வாழ்க்கையை நுகரமுடியாது; வெற்றிபெறவும் முடியாது. சோதனைகளைக் கடந்து வெற்றி பெறும்போது, அதைவிடவும் சுவாரஷ்யம் ஏது?

உழைத்துப் பெறும் பொருட்களுக்கு பெறுமதி அதிகம். காசின் பெருமை வியர்வை சிந்தி உழைப்பவனுக்கே தெரியும். துன்பம் சூழும்போது அச்சத்தை விலக்குக! அவற்றை உடைக்கும் வழிகளை அறிந்திடுக.

வாழ்வின் நுணுக்கம் தோல்வியில் புரிகின்றது. அனுபவங்கள் துன்பங்களைப் பஸ்பமாக்கி விடுகின்றன.

சிலசமயம் துன்பமூட்டும்; அதிலிருந்து விலகினால் சந்தோசம். இது, மீண்டும் மீண்டும் சுழற்சி. காலப்போக்கில் எல்லாமே பழகிவிடும். இவைகளில் இருந்து மனிதன் வலிமை பெறுகின்றான்.

கஷ்டம் என்றால் தங்களுக்கு மட்டும்தான் என எண்ணுவது மனிதபலவீனம். இன்ப துன்பங்களில் இருந்து விலகுவதே ஞானம்.

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

# ஆளும் கட்சியினரின் தேர்தல் ஜன்னி



எம்.எஸ்.எம் ஐயூப்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கட்சியான ஐக்கிய தேசிய கட்சியும் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பலத்தை வைத்திருக்கும் கட்சியான ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவும், இம்முறை உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை ஒத்திப் போடுவதற்காக எடுக்கும் முயற்சிகள் மிகவும் கேவலமானவையாகும்.

விந்தையான விடயம் என்வென்றால், பொதுஜன பெரமுனவானது மூன்றாண்டுகளுக்கு முன்னர் ஜனாதிபதி தேர்தலில் அமோக வெற்றி பெற்று, இன்றும் ரணில் விக்கிரமசிங்கவை அப்பதவியில் அமர்த்தி, அதனை கட்டுப்படுத்தி வரும் கட்சியாகும். இரண்டரை ஆண்டுகளுக்கு முன்னர், அக்கட்சி பொதுத் தேர்தலொன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தையும் பெற்றது.

ரணில் விக்கிரமசிங்கவின் ஐ.தே.க பொதுத் தேர்தலில் மாவட்ட ரீதியாக ஓர் ஆசனத்தையேனும் பெறாத கட்சி என்பதால், அக்கட்சி தேர்தலைக் கண்டு பயப்படுவதை புரிந்து கொள்ளலாம்.

கடந்த ஒக்டோபர் மாதமே, தேர்தலை ஒத்திப்போடும் இந்த முயற்சிகள் ஆரம்பமாகின. அந்த மாதம் ஒன்பதாம் திகதி, ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற கூட்டமொன்றின் போது, ஊள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை 8,000 இலிருந்து 4,000 ஆகக் குறைக்க வேண்டும் என்று ஜனாதிபதி கூறினார்.

அதற்காக நவம்பர் முதல் வாரத்தில், உள்ளூராட்சி அமைச்சரான பிரதமர் தினேஷ் குணவர்தன, தேர்தல் ஆணைக்குழுவின் முன்னாள் தவிசாளர் மஹிந்த தேசப்பிரியவின் தலைமையில், புதிய எல்லை நிர்ணய குழுவொன்றையும் நியமித்தார். இது உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை ஒத்திப் போடும் முயற்சி என எதிர்க்கட்சியினர் கூறினர்.

அதையடுத்து, உள்ளூராட்சி மன்ற உறுப்பினர் எண்ணிக்கையை குறைப்பது உள்ளிட்ட உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் விடயத்தில் திருத்தங்களைக் கொண்டுவர பாராளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றை நியமிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது. அதைப்பற்றி தாம் பிரதமருடன் கலந்தாலோசித்ததாக நீதி அமைச்சர் விஜயதஸ ராஜபக்ஷ, 'சண்டே டைம்ஸ்' பத்திரிகைக்கு கடந்த மாதம் தெரிவித்து இருந்தார். இரண்டு வாரங்களில் தெரிவுக்குழு, தமது அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் அவர் கூறியிருந்தார். ஆனால், அந்தத் தெரிவுக்குழு நியமிக்கப்படவில்லை.

ஏற்கெனவே, 2021ஆம் ஆண்டு மே மாதமும் இதற்காகவே நாடாளுமன்ற தெரிவுக்குகுழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ள நிலையிலேயே, இந்தப் புதிய ஆலோசனை முன்வைக்கப்பட்டது. தினேஷ் குணவர்தனவே, கடந்த வருடம் நியமிக்கப்பட்ட குழுவின் தலைவராகவும் இருந்தார். அவர், 2022 ஜூன் மாதம் 22ஆம் திகதி அக்குழுவின் இறுதி அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தும் இருந்தார்.

ஓய்வு பெற்ற இராணுவ கேர்ணல் ஒருவர், அதன் பின்னர் ஜனவரி மாதம் இரண்டாம் திகதி உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை ஒத்தி வைக்குமாறு தேர்தல் ஆணைக்குழுவைப் பணிக்கும்படி கோரி, உயர்நீதிமன்றத்தில் மனுவொன்றை தாக்கல் செய்தார். தற்போதைய பொருளாதார நிலையில், இத்தேர்தலை நடத்த அரசாங்கத்தால் 1,000 கோடி ரூபாய் செலவழிக்க முடியாது என்பதே அவரது வாதமாகியது.

இது அதற்கு முன்னர், ஐ.தே.கவினதும் பொதுஜன பெரமுனவினதும் தலைவர்கள் மேடை மேடையாகக் கூறித் திரிந்த வாதமாகும். கோடி செலவழித்து மேலும் பல அமைச்சர்களையும் இராஜாங்க அமைச்சர்களையும் நியமிக்க வேண்டும் என்று ஜனாதிபதிக்கு நெருக்குவாரத்தை ஏறபடுத்திக் கொண்டே, பொதுஜன பெரமுன இந்த வாதத்தை முன்வைக்கிறது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களுக்கான வேட்பு மனுக்கள் கடந்த டிசெம்பர் மாத இறுதியில் கோரப்படும் என தேர்தல் ஆணையகம் முன்னர் தெரிவித்து இருந்த போதிலும் அதுவும் தாமதமாகியது. ஏற்கெனவே ஆணையகத்தின் தவிசாளர் நிமல் புஞ்சிஹேவா, ஆளும் கட்சியின் ஆலோசனைப்படி செயற்படுவதாக, மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க குற்றஞ்சாட்டிய நிலையில், ஜனவரி நான்காம் திகதி வேட்பு மனுக் கோரும் அறிவித்தல் வெளியாகியது. அதன்படி 340 மன்றங்களுக்கான வேட்புமனுக்கள் இன்று (18) முதல் 21ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படவிருக்கிறது.

இதனிடையே உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சட்டத்தில் மாற்றம் கொண்டு வரும் வகையில், பொதுஜன பெரமுனவின் உறுப்பினர் பிரேமநாத் சி தொலவத்த பாராளுமனத்தில் தனிநபர் பிரேரணையை முன்வைத்தார். வேட்பாளர் பட்டியல்களில் இளைஞர்களுக்கு கூடுதல் இடம் வழங்கும் வகையிலேயே அவரது பிரேரணை அமைந்திருந்தது.

இதே நோக்கத்துக்காக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார், ஒரு தனி நபர் பிரேரணையை கடந்த வருடம் சமர்ப்பித்து இருந்த நிலையிலேயே இந்தப் புதிய பிரேரணை முன்வைக்கப்பட்டது.

அதேவேளை, தேர்தல் ஆணையகம் இம்முறை உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களுக்காக வேட்பு மனுக் கோரிய பின்னரே, தொலவத்தையின் பிரேரணை பாராளுமன்ற நிகழ்ச்சி நிரலில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளது. நேர்மையான நோக்கத்தில் இந்த விடயம் விவாதிக்கப்பட வேண்டுமானால், பல மாதங்களுக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட்ட இம்தியாஸின் பிரேரணையே முதலில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என எதிர்க்கட்சியினர் கூறினர்.

எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பின் காரணமாக, இந்த முயற்சிகளின் போது அரசாங்கம் பின்வாங்கிய போதிலும், ஜனாதிபதி தமது முயற்சியை கைவிடவில்லை. அவர் ஜனவரி ஆறாம் திகதி தேர்தல் ஆணையகத்தின் உறுப்பினர்களை தமது அலுவலகத்துக்கு அழைத்தார். தேர்தலை நடத்துவதா இல்லையா என்ற விடயத்தில் ஆணையகத்தின் உறுப்பினர்களிடையே உள்ள கருத்து முரண்பாடுகளை முதலில் தீர்த்துக் கொள்ளுமாறு அப்போது அவர் கூறியிருந்தார்.

தேர்தலை நடத்துவது தொடர்பாக ஆணையகத்தின் உறுப்பினர்களிடையே நான்கு கருத்துகள் இருப்பதாக, மறுநாள் சகல பத்திரிகைகளிலும் செய்தி வெளியாகியது. அதேவேளை, தேர்தல் காலத்திலேயே மாணவர்களுக்கான சில தேசிய மட்ட பரீட்சைகள் இடம்பெற இருப்பதால், அதைப் பற்றி பரீட்சை திணைக்களத்தின் அதிகாரிகளுடன் கலந்தரையாடினீர்களா என்றும் ஜனாதிபதி இந்தச் சந்திப்பின் போது கேட்டிருந்தார்.

தேர்தல் செயலகத்தில் கருத்து முரண்பாடு, பரீட்சைகளுக்கு இடையூறு என்று ஏதாவது காரணத்தை முன்வைத்து, தேர்தல்களை ஒத்திப் போடுவதே அவரது நோக்கமாக இருக்கிறது போல தான் தெரிந்தது.

இதுவரை அரசாங்கத்தின் இந்த முயற்சிகள் அனைத்தும் அம்பலமாகி தவிடுபொடியாகிவிட்டன. மன்றங்களின் உறுப்பினர் எண்ணிக்கையை குறைக்க, புதிதாக எல்லை நிர்ணய குழுவொன்று நியமிக்கபட்ட போது தற்போதைய தேர்தலுக்கு தமது குழுவின் அறிக்கையை எதிர்ப்பார்த்திருக்க வேண்டியதில்லை என அக்குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய கூறினார். அதனால் அரசாங்கத்தின் அந்த முயற்சி தோல்வியடைந்தது.

தேர்தலுக்காக 10 பில்லியன் ரூபாய் செவழிப்பது முறையாகாது என்ற வாதத்துக்கு பதிலளித்த எதிர்க்கட்சியினர், அரசாங்கத்தின் இவ்வருட செலவினம் 7,000 பில்லியன் ரூபாய் என மதிப்பிட்டுள்ளதால் அதில் 10 பில்லியன் என்பது மிகவும் சிறிய தொகை என வாதிட்டனர்.

அதேவேளை, தேர்தலுக்காக ஏற்கெனவே பணம் ஒதுக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையகத்தின் தவிசாளர் நிமல் புஞ்சிஹேவா, கடந்த ஒன்பதாம் திகதி ஒளிபரப்பான தொலைக்காட்சி உரையாடல் ஒன்றின் போது தெரிவித்தார். தேர்தலுக்காக 10 பில்லியன் ரூபாய் தேவைப்படாது என்றும் அவர் அப்போது கூறினார்.

தேர்தல் செயலகத்தில் கருத்து முரண்பாடு என்ற ஜனாதிபதியின் கருத்தையும் மறுத்த அவர், இதுவரை எடுக்கப்பட்ட சகல முடிவுகளும் ஆணையகத்தின் சகல உறுப்பினர்களினதும் கூட்டு முடிவுகளாகும். இதுவரை வெளியிடப்பட்ட மூன்று வர்த்தமானி அறிவித்தல்களிலும் ஆணையகத்தின் சகல உறுப்பினர்களும் கையொப்பமிட்டதாகவும் கூறினார்.

இதே கருத்தை, அதற்கு ஓரிரு தினங்களுக்கு முன்னர் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்னாயக்கவும் கண்டியில் கூறியிருந்தார். வரவு - செலவு திட்டத்தின மூலம் தேர்தல் செயலகத்துக்கு தேவையான நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தேர்தலொன்று அறிவிக்கப்பட்ட நிலையில், கட்சியொன்றின் தலைவரான ஜனாதிபதி, தேர்தல் ஆணையகத்தின் உறுப்பினர்களை சந்தித்து, அவர்களுக்கு ஆலோசனை வழங்கியமை அநாகரியமானது என்றும் சட்ட விரோதமானது என்றும் தேர்தல் கண்காணிப்புக் குழுக்கள் விமர்சித்துள்ளன. அதுவும் தேர்தலை ஒத்திப் போடும் முயற்சியாகும் என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.

தற்போதைய பொருளாதார நெருக்கடியின் காரணமாக, தேர்தலுக்காக பல பில்லியன் ரூபாய் செலவிடுவது ஒரு பிரச்சினை தான். ஆனால், இந்தப் பொருளாதார பிரச்சினை தீரும் வரை, எத்தனை வருடங்கள் தேர்தல்களை ஒத்திப் போடுவது என்ற கேள்வியும் அத்தோடு எழுகிறது.

அதேவேளை, செலவைப் பற்றி அரசாங்கம் அந்தளவு அக்கறையோடு செயற்படுவதாக இருந்தால் 8,700 ஆக இருக்கும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை 4,000 ஆகக் குறைக்கும் அதன் திட்டத்தை முன்னெடுத்துச் சென்றிருக்கலாம்.

அதற்காக எல்லை நிர்ணய பணிகளை ஆரம்பித்தால் நிச்சயமாக தேர்தலை ஒத்திவைக்க நேரும் என்பதால், எதிர்க்கட்சிகளோடு பேச்சுவார்த்தை நடத்தி இம்முறை மட்டும் பழைய விகிதாசார முறைப்படி தேர்தலை நடத்திவிட்டு, பின்னர் ஆறுதலாக கலப்பு முறைப்படி 4000 உறுப்பினர்களை தெரிவு செய்யும் வகையில் சட்டத்தை மாற்றிக் கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கலாம்.

ஆனால், அரசாங்கத்தின் நோக்கமே தேர்தலை ஒத்திப் போடுவதாகும். ஏனெனில் தற்போதைய பொருளாதார நெருக்கடியின் காரணமாகவும் அரச தலைவர்களின் ஊழல்கள் அம்பலமாகி உள்ள நிலையிலும் ஆளும் கட்சிகளான பொதுஜன பெரமுனவும் ஐ.தே.கவும் தேர்தல்களை சந்திக்க பயப்படுகின்றன.

## கடிதங்கள்

### காட்டு யானைகளின் இருப்பிடமாகிய கந்தளாய் செயற்கை பசளை மத்திய நிலையம்

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் பிரதேச சபைக்கு உட்பட்ட சூரியபுர பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டு வரும் திண்மக் கழிவு முகாமைத்துவ



வேலைத்திட்டத்தின் கீழ், செயற்கை பசளை மத்திய நிலையம் நிர்மாணிப்பு நடவடிக்கைகள் நிறைவு பெறாது காணப்படுகின்றன.

கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர், 30 மில்லியன் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்ட இந்தச் செயற்கை பசளை மத்திய நிலையமானது, காட்டு யானைகளின் வாழ்விடமாக மாறி வருவதை காணக்கூடியதாகவுள்ளது.

கந்தளாய் பிரதேச சபைக்கு உட்பட்ட சூரிய புற ஒன்பதாம் கட்டைப் பகுதியிலே இச்செயற்கை உர மத்திய நிலையம் அமையவுள்ளது.

குப்பைகளை பயன்படுத்தி, செயற்கை உரங்களை தயாரிக்கும் மத்திய நிலையமானது 2022.11.10 ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டபோதிலும், இன்று வரை இச்செயற்றிட்டம் முழுமை பெறாமல் காணப்படுவதோடு, இரவு - பகல் வேளைகளில் யானைகள் அப்பகுதியை ஆக்கிரமிப்பதை காணக்கூடியதாகவுள்ளது.

திண்மக் கழிவு முகாமைத்துவ செயற்றிட்டமானது, அந்த வளாகத்தைச் சுற்றி பற்றைக்காடுகள் வளர்ந்துள்ளதோடு, வேலிகள் இன்றிக் காணப்படுகின்றது. கட்டாக்காலி நாய்களின் கூடாரமாகவும் மாறியுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

கந்தளாய் - மூதூர் பிரதான வீதியின் அமைந்துள்ள இச்செயற்கை நிலையத்தின் வேலைகள் எப்போது நிறைவு பெறும் என மக்கள் எதிர்பார்போடு உள்ளமை குறிப்பிடத்தக்கது.

எப். முபாரக்

# அமைச்சரவை முடிவுகள் சில...

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் 2023.01.16 நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எட்டப்பட்ட முடிவுகள்:**



### சர்வதேச வர்த்தக அலுவலகம் தாபித்தல்

சர்வதேச வர்த்தக அலுவலகத்தை தாபிப்பதற்காக 2022.10.03 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. ஆரம்பத்தில் குறித்த அலுவலகம் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் கீழ் நிறுவப்பட்டு, பின்னர் வெளிவிவகார அமைச்சுடன் ஒன்றிணைப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கமைய, தயாரிக்கப்பட்டுள்ள அடிப்படைச் சட்டமூலத்தின் பிரகாரம் சர்வதேச வர்த்தக அலுவலகத்திற்கான சட்டமூலத்தைத் தயாரிக்குமாறு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றில் கையொப்பமிடல்

ஆராய்ச்சி பரிமாற்று நிகழ்ச்சித்திட்டங்கள், சமுத்திரம் பற்றிய அனர்த்தங்களை முற்கூட்டியே கண்டறிதல் போன்றவற்றுக்காக இலங்கை விஞ்ஞானிகளின் இயலளவு விருத்தி மற்றும் மீன்வள வலயங்கள் தொடர்பான முன் அறிவிப்புக்களுக்கான பயிற்சிகளை வழங்கல் போன்ற இருதரப்பினரும் உடன்படுகின்ற விடயங்களுக்காக இந்தியாவின் விஞ்ஞான நிறுவனத்துடன் இணைந்துள்ள வளிமண்டல மற்றும் சமுத்திரவியல் நிலையம் மற்றும் தேசிய நீரியல் வளங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவர் நிறுவனத்திற்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றை மேற்கொள்வதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. அதற்காக தயாரிக்கப்பட்டுள்ள ஒப்பந்த வரைபுக்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் மற்றும் வெளிவிவகார அமைச்சின் உடன்பாடும் கிடைத்துள்ளது. அதற்கமைய முன்மொழியப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்காக கடற்றொழில் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### இலங்கை மின்சார சபைக்கு காணித்துண்டொன்று வழங்கல்

அரச காணிகள் கட்டளைச் சட்டத்தின் 6(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அம்பாந்தோட்டை கெலியபுரத்தில் அமைந்துள்ள 03 ஏக்கர் 01 றூட் 10.65 பேர்ச்சர்ஸ் காணித்துண்டை குத்தகை அடிப்படையில் 30 வருடகாலத்திற்கு மின்கம்பங்களை களஞ்சியப்படுத்தி வைக்கும் நிலையமாக பயன்படுத்துவதற்காக இலங்கை மின்சார சபைக்கு வழங்குவதற்காக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் மற்றும் மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் இணைந்து சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### இலங்கை வரிவிதிப்பு நிறுவகத்தின் பெயர் திருத்தம்

இலங்கை வரிவிதிப்பு நிறுவனத்தின் பெயர் மகுடத்தை இலங்கை வரிவிதிப்பு பட்டய நிறுவகமாக திருத்தம் செய்வதற்காக, பாராளுமன்ற உறுப்பினர் மதுர விதானவினால் தனிப்பட்ட உறுப்பினர் சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. பாராளுமன்றத்தின் நிலையியல் கட்டளைகள் 52 (6) இன் ஏற்பாடுகளுக்கமைய குறித்த சட்டமூலத்தை விதந்துரைத்து பாராளுமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பிப்பதற்காக நிதி பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### சிவில் விமான சேவை ஒழுங்குவிதிகள்

வானூர்தி நிலையங்கள் மற்றும் வானூர்தி நிலையங்களில் வழங்கப்படும் சேவைகளையும் பயன்படுத்துவதற்காக விதிக்கப்படும் கட்டணங்களைத் திருத்தம் செய்து அதற்குரிய ஒழுங்குவிதிகள் 2022.10.26 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ளது. அத்துடன், குறித்த ஒழுங்குவிதிகளை யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்திற்கும் ஏற்புடையதாக்கிக் கொள்வதற்காக 2022.11.02 ஆம் திகதி வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டுள்ளது. அதற்கமைய, குறித்த ஒழுங்குவிதிகளை பாராளுமனற்த்தில் சமர்ப்பிப்பதற்காக துறைமுகங்கள், கப்பல்தறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### முதலிடல் மற்றும் ஏற்றுமதி உறுப்பாண்மை நிறுவனத்தைத் தாபித்தல்

ஒருவருக்கொருவர் இசைவாக்கமுடைய மற்றும் ஒருங்கிணைந்த அணுகுமுறையுடன் முதலிடல் மற்றும் ஏற்றுமதி ஊக்குவிப்புக்காக தனியொரு நிறுவனத்தை தாபிப்பதற்கான முன்மொழிவு 2023 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ளது. அதற்கமைய, முதலீட்டு சபை மற்றும் ஏற்றுமதி அபிவிருத்திச் சபைக்குப் பதிலாக புதிய உறுப்பாண்மை நிறுவனத்தை தாபிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. குறித்த உறுப்பாண்மை நிறுவனத்தைத் தாபிப்பதற்கான கருமங்களை முகாமைத்துவப்படுத்தவும், நெறிப்படுத்தவும் கண்காணிப்புக் குழுவொன்றை நியமிப்பதற்காக கௌரவ ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### நெல் கொள்வனவுக்கான அரச வேலைத்திட்டம்

நிலவுகின்ற பொருளாதார நெருக்கடி நிலைமையின் கீழ் அடையாளங் காணப்பட்ட குறைந்த வருமானங் கொண்டவர்களின் வாழ்க்கைத்தரத்தை அதிகரிப்பதற்காக மேலதிக சலுகைகளை வழங்கக்கூடிய வகையில், முன்மொழியப்பட்டுள்ள நெற் கொள்வனவு நிகழ்ச்சித்திட்டம் திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கமைய, அடையாளங் காணப்பட்டுள்ள இரண்டு மில்லியன் மக்களை உள்ளடக்கியதாக ஒரு குடும்பத்திற்கு மாதமொன்றுக்கு 10 கிலோகிராம் அரிசி வீதம் இரண்டு மாதங்களுக்கு வழங்குவதற்கு இயலுமாகும் வகையில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலைகளின் உரிமையாளர்களின் பங்குபற்றலுடன் மாவட்டச் செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்கள் மூலம் 2022/23 பெரும்போகச் செய்கையில் நெற் கொள்வனவுக்கான அரச வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### மீண்டுவரும் செலவின ஒதுக்கீடுகளை 6% வீதத்தால் குறைத்தல்

நிலவுகின்ற மட்டுப்படுத்தப்பட்ட நிதிச் சூழமைவுகளில் அரச செலவுகளைக் கட்டுப்படுத்துவதற்கும் மற்றும் அத்தியாவசியமானதும் முன்னுரிமைப்படுத்தப்பட்ட கருமங்களுக்காக போதியளவு ஒதுக்கீடுகளை உறுதிப்படுத்தும் வகையில் 2023 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட அரச செலவின மதிப்பீடுகளில் மீண்டுவரும் செலவின ஒதுக்கீடுகள் 5% வீதத்தால் குறைப்பதற்கு 2023.01.09 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. குறித்த தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்காக திறைசேரியால் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படும் நடவடிக்கைகளை நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி அமைச்சரவைக்கு சமர்ப்பித்துள்ளார். அதற்கமைய, இடம்பெற்ற கலந்துரையாடலில் மீண்டுவரும் செலவின ஒதுக்கீடுகளில் 5% வீதத்திற்குப் பதிலாக அங்கீகரிக்கப்பட்ட அரச செலவின மதிப்பீடுகளில் மீண்டுவரும் செலவின ஒதுக்கீடுகளை 6% வீதத்தால் குறைப்பதற்கும், அதில் 1% வீதத்திற்கு சமமான ஒதுக்கீட்டை அத்தியாவசிய மருந்துப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கான மேலதிக நிதியொதுக்கீடாக சுகாதார அமைச்சுக்கு ஒதுக்கி வழங்குவதற்கும் அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

### குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்கான சலுகை

புதிய நலன்புரி நன்மைகளை செலுத்தும் முன்மொழிவு முறைமையை துரிதமாக ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளதுடன், அதற்காக புதிய தகைமைகாண் மற்றும் அளவுகோல்களைப் பயன்படுத்தி பயனாளிகளை அடையாளங் காண்பதற்கான கணக்கெடுப்பு தற்போது ஆரம்பிக்கப்பட்டு நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. தற்போது நிலவுகின்ற நெருக்கடியான பொருளாதார சூழலில் இடர்களுக்கு ஆளாகக்கூடிய குடும்பங்கள் முகங்கொடுக்கின்ற சிரமங்களைத் தவிர்ப்பதற்காக, 2023 ஆம் ஆண்டில் முதல் நான்கு (04) மாதங்களுக்கு நிதிச் சலுகை வழங்குவதற்கும் 2023 ஆம் ஆண்டின் வரவு செலவுத்திட்டத்தின் மூலம் தேவையான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. தற்பொது ஆரம்பிக்கப்பட்டுள்ள கணக்கெடுப்புக்களைப் பூர்;த்தி செய்து, முன்மொழியப்பட்டுள்ள புதிய நலன்புரி நன்மைகளை செலுத்தும் முன்மொழியப்பட்டுள்ள முறைமையை அறிமுகப்படுத்தும் வரை, சமுர்த்தி பயனாளிகள் உள்ளிட்ட சமூகத்தில் இடர்களுக்கு ஆளாகக்கூடிய குடும்பங்களுக்கு 2023 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தின் மூலம் முன்மொழியப்பட்டுள்ள நிதிச்சலுகைகளை 2023 ஆம் ஆண்டு மே மாதம் தொடக்கம் செப்ரெம்பர் மாதம் வரைக்கும் மேலும் ஐந்து (05) மாதகாலத்திற்கு நீடிப்பதற்கு தேவையான நிதியொதுக்கீட்டை வழங்குவதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

காஞ்சிபுரம்

## 50 பெண்களிடம் அத்துமீறிய பொலிஸ் அதிகாரிகள்?



காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூரைச் சேர்ந்த 20 வயதான யுவதியொருவர் தனியார் நிறுவனம் ஒன்றில் பணிபுரிந்து வந்துள்ளார்.

இந்நிலையில் அண்மையில் குறித்த யுவதி, நள்ளிரவு வேளை தண்டளம் வீதியோரம், தனது நண்பருடன் அலைபேசியில் பேசியவாறு சென்று கொண்டிருந்த போது, அங்கு காக்கிச்சீருடையில் வந்த இருவர், தங்களை பொலிஸ் அதிகாரிகள் எனவும், “உன்னை விசாரிக்க வேண்டும்” எனவும் கூறி, யுவதியை வலுக்கட்டாயமாக தங்களது இரு சக்கர வாகனத்தில் ஏற்றிச்சென்று பலாத்காரம் செய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், பாதிக்கப்பட்ட யுவதி, பொலிஸ் நிலையத்தில் புகார் அளித்ததையடுத்து ஏ.டிஎஸ்.பி வெள்ளத்துரை தலைமையிலான பொலிஸார் விசாரணைக்கு களமிறக்கப்பட்டனர்.

இதனையடுத்து தீவிர தேடுதலின் பின்னர் குற்றவாளிகளான நாகராஜ், பிரகாஷ் ஆகியோரைப் பொலிஸார் கைது செய்தனர்.

இந்நிலையில் பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் குறித்த இருவரும், தனியார் நிறுவனங்களில் பணிபுரிந்துவிட்டு இரவு வேளைகளில் வீடு செல்லும் பெண்களைக் குறிவைத்து, பணப்பறிப்பில் ஈடுபட்டு வந்துள்ளனர் என்பது தெரிய வந்துள்ளது.

அத்துடன் இவர்கள் பல காதல் ஜோடிகளிடம் தம்மை பொலிஸ் அதிகாரிகளாக இனம்காட்டி பணம் பறித்துள்ளனர் எனவும், 50 க்கும் மேற்பட்ட பெண்களை மிரட்டி பாலியல் பலாத்காரம் செய்துள்ளனர் என்பதும் தெரியவந்துள்ளது.

இந்நிலையில் இவர்களிடமிருந்து அரிவாள் கத்தி, ரிவோல்வர், வோக்கிடொக்கி, இரு சக்கரவாகனங்கள், இரும்பு சட்டங்கள், கையுறை, முகமூடி, கட்டர், மிளகாய் பொடி ஆகியவற்றைக் கைப்பற்றிய பொலிஸார் இது குறித்த மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

ஹரியானா



## சிறுமியின் உயிரைப் பறித்த பொலிஸார் தப்பியோட்டம்

ஹரியானா மாநிலம், குருகிராம் - பரிதாபாத் வீதியில் அண்மையில் லொறியொன்று விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்நிலையில் குறித்த பகுதியில் போக்குவரத்தைச் சீர் செய்ய வேகமாகச் சென்ற பொலிஸாரின் காரொன்று எதிரே வந்த கார் மீது மோதியுள்ளது.

இவ்விபத்தில், எதிரே வந்தகாரில் பயணம் செய்த 6 வயதான சிறுமியொருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் எனவும், மேலும் ஐவர் படுகாயங்களுக்குள்ளான நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இவ்விபத்து நிகழ்ந்த போது காரில் பயணித்த மூன்று பொலிஸாரும் குறித்த இடத்தை விட்டுத் தப்பிச்சென்றுள்ளனர்.

இதனையடுத்து மூவரும் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர் எனவும், இதுகுறித்த மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுவருவதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

டெல்லி




## ஒக்சிஜன் சிலிண்டர்களுடன் பா.ஜ.க எம்எல்ஏக்கள்

டெல்லியில், அண்மையில் இடம்பெற்ற சட்டமன்றக் கூட்டத் தொடருக்கு பாரதிய ஜனதா கட்சியைச் சேர்ந்த எம்.எல்.ஏக்கள் நால்வர் ஒக்சிஜன் சிலிண்டரை தாங்கிய வண்ணம் வருகை தந்திருந்தமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

டெல்லியில் நிலவும் காற்று மாசு பிரச்சனைக்கு அரவிந்த்கெஜ்ரிவால் அரசு உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்பதை வெளிப்படுத்தும் விதமாகவே அவர்கள் இவ்வாறு வருகை தந்திருந்தனர் என எதிர்க்கட்சித் தலைவர் விஜயேந்தர் குப்தா தெரிவித்துள்ளார்.

திருச்சி

## விமான நிலையத்திற்கு வெடிகுண்டு மிரட்டல்



திருச்சி விமான நிலையத்தில் இருந்து மலேசியா, சிங்கப்பூர் உள்ளிட்ட பல்வேறு நாடுகளுக்கும், சென்னை, ஐதராபாத், புதுடெல்லி, பெங்களூரு உள்ளிட்ட நகரங்களுக்கும் விமானங்கள் இயக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் நண்பகல் சுமார் 1.45 மணியளவில் திருச்சி விமான நிலைய மேலாளர் அறைக்கு தொலைபேசி அழைப்பை ஏற்படுத்திய மர்ம நபர் ஒருவர் ”விமான நிலையத்திற்கு வெடிகுண்டு வைத்திருப்பதாக்கூறி ”தொடர்பைத் துண்டித்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் அதிர்ச்சியடைந்த அவர் இது குறித்து உடனடியாக பாதுகாப்பு படையினருக்கு தகவல் தெரிவித்துள்ள நிலையில், அங்கு வந்த வெடிகுண்டு தடுப்புப் பிரிவு அதிகாரிகள் அப்பகுதியில் தீவிர சோதனை நடத்தியுள்ளனர்.

நண்பகல் 2 மணியளவில் தொடங்கிய இச் சோதனையானது மாலை 5 மணி வரை நடைபெற்றதாகவும், இச் சோதனையின் முடிவில் அங்கு வெடிகுண்டு எதுவும் வைக்கப்படவில்லை என்பதும் தெரியவந்துள்ளது.

இதைத்தொடர்ந்து தொலைபேசியில் மிரட்டல் விடுத்த நபர் குறித்து பொலிஸார் தீவிர விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கேரளா

## இந்தியாவில் மீண்டும் முகக் கவசம்



கொரோனாத் தொற்றுப் பரவலானது நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்க ப்பட்டுள்ளது.

இந்நிலையில் கேரளாவில் பொது இடங்களில் முகக் கவசம் அணிவதை மாநில அரசு கட்டாயமாக்கியுள்ளது. இது குறித்து கேரள அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் ‘கொரோனாத் தொற்றானது தொடர்ந்து அச்சுறுத்தலாக உள்ளது.

நாடு முழுவதும் கொரோனா பாதிப்பு அதிகரிக்கக் கூடும் என்ற அச்சம் நிலவுகின்றது. எனவே கேரளத்தில் பொது இடங்களில் முகக் கவசம் அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

மக்கள் தமது சொந்த வாகனங்கள், மற்றும் பொதுப் போக்குவரத்துகளில் செல்லும் போதும் கட்டாயமாக முகக் கவசம் அணிந்திருக்க வேண்டும். அனைவரும் தனிநபர் இடைவெளியைக் கடைப்பிடிக்க வேண்டும்” .

அயோத்தி

## அயோத்தி ராமர் கோயில் மீது பயங்கரவாதத் தாக்குதல் ?

அயோத்தியில் கட்டப்பட்டு வரும் ராமர் கோயில் மீது தற்கொலைப்படைத் தாக்குதல் நடத்த தீவிரவாதிகள் திட்டமிட்டுள்ளதாக உளவுத்துறை தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானில் செயற்பட்டுவரும் ஜெய்ஷ் இ முகமது அமைப்பைச் சேர்ந்த தீவிரவாதிகள் நேபாளம் வழியாக இந்தியாவுக்குள் நுழையவுள்ளனர் எனவும், பலகோடிரூபாய் செலவில் கட்டப்பட்டு வரும் ராமர் கோயில் மீது அவர்கள் தற்கொலைப்படைத் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டுள்ளனர் எனவும் இந்திய உளவுத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதனையடுத்து அயோத்தியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.






## இந்தியா எதிர் நியூசிலாந்து:

# ODI தொடர் இன்று ஆரம்பிக்கிறது

இந்தியா, நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரானது, ஹைதரபாத்தில் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ள முதலாவது போட்டியுடன் ஆரம்பிக்கின்றது.

இவ்வாண்டு இந்தியாவிலேயே உலகக் கிண்ணம் நடைபெறவுள்ள நிலையில், தத்தமது அணிகளை உறுதிப்படுத்திக் கொள்ள இரண்டு அணிகளுக்கும் இத்தொடர் வாய்ப்பாகக் காணப்படுகின்றது.

இந்திய அணியைப் பொறுத்த வரையில் இத்தொடரில் லோகேஷ் ராகுல், அக்ஸர் பட்டேல் ஆகியோர் விளையாட முடியாத நிலையில், இஷன் கிஷன், வொஷிங்டன் சுந்தர் போன்றோரை அணியில் உள்ளடக்குவதற்கான சந்தர்ப்பமாக இது காணப்படுகின்றது.

தவிர, யுஸ்வேந்திர சஹால், குல்டீப் யாதவ் ஆகிய இருவரில் எவரைத் தேர்வு செய்வதென்பதைத் தீர்மானிக்கக் கூடிய வகையில் இத்தொடர் காணப்படுகிறது.

இதேவேளை, சூரியகுமார் யாதவ்வை அணியில் உள்ளடக்குவதா என்ற தெளிவையும் இத்தொடர் வழங்கலாம்.

இதுதவிர, தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களில் பிரதியிடுவதற்கான ஷர்துல் தாக்கூர், ஷபாஸ் அஹ்மட் ஆகியோரையும் இத்தொடரில் இந்தியா பரீசிலிக்கலாம்.

இந்நிலையில் நியூசிலாந்துப் பக்கம் இந்தியாவில் பின் அலென் தன்னை நிரூபித்துக் காட்ட வேண்டியுள்ளார். ஏனெனில், குழாமில் மார்டின் கப்தில் காணப்படுகின்றார். தவிர, ஹென்றி நிக்கொல்ஸும் ஓட்டங்களைப் பெற வேண்டியுள்ளதுடன், மிஷெல் பிறேஸ்வெல்லின் பெறுபேறுகளை பார்க்கக் கூடிய தொடராக இத்தொடர் காணப்படுகின்றது.




## புத்தளம் லிவர்பூல் கால்பந்தாட்ட கழகத்தின்

# 34ஆவது வருட நிறைவும் வருடாந்த பொதுக்கூட்டமும்

■ எம்.யூ.எம். சனூன்

புத்தளம் லிவர்பூல் கால்பந்தாட்டக் கழகத்தின் 34 ஆவது வருட நிறைவும் அதன் வருடாந்த பொதுக்கூட்டமும் புத்தளம் மஸ்ஜித் வீதியில் அமைந்துள்ள கலாசார மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.

கழகத்தின் தலைவர் எம்.ஆர்.எம். நில்பான் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் 200 க்கும் மேற்பட்ட கழக அங்கத்தவர்கள் கலந்து கொண்டனர்.

செயலாளர் கே.எம். ஹிசாம் வருடாந்த பொதுக்கூட்ட அறிக்கையையும், பொருளாளர் எம். ரிஸான் வருடாந்த நிதி அறிக்கையையும் சபையில் சமர்ப்பித்தனர்.

கழகத்தின் எதிர்கால வளர்ச்சியை கருத்தில் கொண்டு பல்வேறு ஆலோசனைகளும் சபையில் முன்மொழியப்பட்டன.

தொடர்ந்து பழைய நிர்வாகம் கலைக்கப்பட்டு புதிய நிர்வாகம் தெரிவு செய்யும் நோக்கில் தற்காலிக இணை தலைவர்களாக கழக அங்கத்தவர்களான அஷ்ஷெய்க் ஜிப்னாஸ், அஷ்ஷெய்க் சகீனத் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தற்காலிக இணைத் தலைமையில் நடைபெற்ற புதிய நிர்வாக சபை தெரிவில் நடப்பு வருட நிர்வாகிகளாக பின்வருவோர் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: ஜே. அஸ்வர்தீன்
செயலாளர்: கே.எம். ஹிசாம்
பொருளாளர்: எம்.ஐ.எம். மூஸீன்
உப தலைவர்கள்: ரனீஸ் பதியுதீன், எம். ஆர்.எம். பரூஸ், ஏ.எம். அன்சார்
உதவிச் செயலாளர்: எம்.சீ.எம். இஸ்மத்
நிர்வாக உறுப்பினர்கள்: ஐ.ஏ. சிஹான், ஏ. ரிசான், எம்.வை. ரிழ்வான், கே.எம். சவாஹிர்



## மாகாண மட்ட சதுரங்க போட்டியில்

# பலாங்கொட ஜெய்லானி தேசிய கல்லூரி மாணவர்கள் சாதனை

■ அஸ்ஹர் இப்றாஹிம்

சப்ரகமுவ மாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான சதுரங்கத் தொடரில், இரத்தினபுரி, பலாங்கொட ஜெய்லானி தேசியக் கல்லூரி மாணவ மாணவிகள் வெற்றி பெற்றதுடன் மிகவும் குறைந்த புள்ளி வித்தியாசத்தில் தேசிய மட்ட போட்டிகளுக்கு தகுதி பெறும் வாய்ப்பை இழந்தனர்.

இம்மாணவ, மாணவிகள் குறுகிய காலத்துக்குள் செஸ்ஸை பயின்று திறமையாக விளையாடக்கூடிய போட்டியாளர்களை எதிர்த்து வெற்றியீட்டினர்.

இலங்கை பாடசாலை செஸ் சங்கத்தால் அண்மையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இத்தொடரில் 13 வயது ஆண்கள், 13 வயது பெண்கள், 15வயது பெண்கள், 17 வயது பெண்கள் ஆகிய நான்கு வயதுப் பிரிவுகளில் 28 மாணவ, மாணவிகள் பங்குபற்றினர்.

இதில், 13 வயது ஆண்கள்பிரிவில் எம்.வை.ஏ. ஹஸீர் நடைபெற்ற 5 போட்டிகளிலும் சிறப்பு வெற்றி பெற்று பங்கு பற்றிய 150க்கு மேற்பட்ட மாணவர்களுள் சிறந்த வீரராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கல்லூரி வரலாற்றில் முதல் தடவையாக மாணவர்கள் இவ்வாறானதொரு செஸ் விளையாட்டுப் போட்டியொன்றில் மாகாண மட்டப் போட்டியில் பங்குபற்றி மிகத் திறமையாக விளையாடி பாடசாலைக்கு பெருமை சேர்த்துத் தந்துள்ளதாக கல்லூரி அதிபர் எம்.ஜே.எம். மன்சூர் தெரிவித்தார்.

# லிவர்பூலிலிருந்து வெளியேற மாட்டேன்: க்ளொப்



இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான லிவர்பூலிலிருந்து வலிந்து வெளியேற்றாவிடின் விலக மாட்டேன் என அக்கழகத்தின் முகாமையாளர் ஜுர்ஜன் க்ளொப் தெரிவித்துள்ளார்.

அண்மைய போட்டிகளில் லிவர்பூல் தடுமாறி வருகின்ற நிலையிலேயே க்ளொப்பின் இக்கருத்து வெளியாகியுள்ளது.

கடந்த 2015ஆம் ஆண்டு லிவர்பூலில் க்ளொப் இணைந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

நேபாளம்

# 2006-ல் கணவர், 2023-ல் மனைவி





விமான விபத்தில் தனது கணவரைப் பறிகொடுத்த பெண் விமானியொருவர், 16 ஆண்டுகளுக்குப் பின்னர் அதேபோன்றதொரு விபத்தில் உயிரிழந்த சம்பவம் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

நேபாளத்தில் 'எதி ஏர்லைன்ஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான பயணிகள் விமானமொன்று கடந்த 15 ஆம் திகதி விபத்துக்குள்ளானது.

இவ்விபத்தில், விமானத்தில் பயணித்த 69 பேர் உயிரிழந்தனர். இந்நிலையில் 2006 ஆம் ஆண்டு விமான விபத்தில் தனது கணவரைப் பறிகொடுத்த அஞ்சு என்ற விமானி,16 வருடங்கள் கழித்து 15 ஆம் திகதி இடம்பெற்ற குறித்த விமான விபத்தில் உயிரிழந்துள்ளமை அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அஞ்சுவின் கணவரும் விமானியுமான தீபக், எதி ஏர்லைன்ஸ் விமானியாக பணியாற்றி வந்த நிலையில் 2006ஆம் ஆண்டு இடம்பெற்ற சிறிய ரக விமான விபத்தில் அவர் உயிரிழந்தார்.

இதனையடுத்து தீபக்கின் காப்பீட்டுத் தொகையில் கிடைத்த பணத்தின் மூலம், மஞ்சு அமெரிக்கா சென்று விமான ஓட்டியாக பயிற்சி எடுத்து, 2010ஆம் ஆண்டு எதி ஏர்லைன்ஸில் விமானியாக இணைந்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

எல் சால்வடார்



# சக்திவாய்ந்த நிலநடுக்கம்; 130 வீடுகள் சேதம்

மத்திய அமெரிக்க நாடான எல் சால்வடாரில் கடந்த 15 ஆம் திகதி முதல் அடுத்தடுத்து சுமார் 219 நில அதிர்வுகள் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இவை ரிச்டர் அளவுகோலில் 5.1 ஆகப் பதிவாகியுள்ளதாகவும் இந்நிலையில் இந்நிலநடுக்கங்களால் ஏற்பட்ட மண்சரிவுகளில் சிக்கி பலர் காணாமல் போயுள்ளனர் எனவும், அவர்களை மீட்கும் பணியில் மீட்புப் படையினர் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் 100 க்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்துள்ளன எனவும், தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியா



# ஓடியே உலக சாதனை படைத்த பெண்

அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த எர்சனா முர்ரே என்ற பெண், 150 நாள்கள் தொடர்ச்சியாக மரதன் ஓடி உலக சாதனை படைத்துள்ளார்.

மேலும் இவர் இதுவரை 6,300 கிலோ மீற்றர் தூரத்தை மரதன் ஓட்டத்தின் நிறைவு செய்துள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமல்லாது அவுஸ்திரேலிய மக்கள் மத்தியில் விலங்குகள் மற்றும் தாவரங்களைப் பாதுகாப்பது குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவே இம் மரதன் ஓட்டத்தில் அவர் ஈடுபட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா




# மர்ம நபர்கள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 6 பேர் உயிரிழப்பு

அமெரிக்காவின், கலிஃபோனியா மாகாணத்தில் உள்ள துலாரே நகரில், கடந்த 16 ஆம் திகதி மர்ம நபர்கள் சிலர், அப்பகுதியில் உள்ள ஒரு வீட்டை குறிவைத்து நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 6 மாத குழந்தை உட்பட 6 பேர் உயிரிழந்துள்ளனர்.

சுமார் 70,000 மக்கள் வசிக்கும் குறித்த நகரில் அதிகாலை 3 மணியளவில் இக் கொடூரத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த வீட்டில் கடந்த வாரம் போதைப் பொருள் தொடர்பான விசாரணையில் பொலிஸார் ஈடுபட்டிருந்த நிலையில், போதைப் பொருள் கடத்தல் உள்ளிட்ட குற்றச் சம்பவங்களில் ஈடுபடும் கும்பலொன்றே இக் கொடூரத் தாக்குதலில் ஈடுபட்டிருக்கலாம் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சீனா



# புற்றுநோய்க்கு மருந்தாகும் கரப்பான்?

சீனர்கள் கரப்பான் பூச்சிகளை விலங்குகளுக்கு உணவாகவும், மருந்துகள் தயாரிக்கவும், அழகுச் சாதனப் பொருட்களின் உற்பத்திக்கும் பயன்படுத்தி வருகின்றனர்.

கரப்பான் பூச்சிகளைப் பண்ணையில் வளர்ப்பது அருவருக்கத்தக்கதாகத் தோன்றினாலும், இதிலிருந்து தயாரிக்கப்படும் மருந்துகள் கோடிக் கணக்கான ரூபாய்களுக்கு விற்பனை செய்யப்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமல்லாது பொதுவாகச் சுவாசப் பிரச்சினைகள் மற்றும் இரைப்பை பிரச்சினைகளுக்கு சிறந்த மருந்தாக சீனர்கள் கரப்பான்பூச்சிகளைப் பயன்படுத்தி வருகின்றனர்.

இவை தவிர வழுக்கை, வடுக்கள் ஏன் புற்றுநோய் கட்டிகளுக்குக் கூட கரப்பான் பூச்சிகளைப் பயன்படுத்தி தயாரிக்கும் மருந்துகளை சீனர்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

அதே சமயம் கரப்பான் பூச்சிகளில் அதிகளவில் புரதச்சத்துக் காணப்படுவதாகவும் இதனால் விலங்குகள் மாத்திரமன்றி மனிதர்களும் இதனை விரும்பி உண்டு வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புர்கினோபாசோ



# 50 பெண்கள் கடத்தல்

மேற்கு ஆபிரிக்க நாடான புர்கினோ பாசோவில் 2013ஆம் ஆண்டு முதல் அல்-கொய்தா மற்றும் ஐஎஸ் ஆதரவு பயங்கரவாதிகள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர்.

இந்நிலையில் சாஹெல் மாகாணத்திலுள்ள அர்பிந்தா நகரில் கடந்த 12 மற்றும் 13 ஆம் திகதிகளில் பயங்கரவாதிகளால் 50 பெண்கள் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர் என அம் மாகாண ஆளுநர் ரோடொல்ஃபோ சோஃகோ தெரிவித்துள்ளார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை, 18 ஜனவரி 2023, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.